வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 07.03.2022 திங்கட்கிழமை | இதழ் : 92 | பக்கங்கள் : 16

# இலங்கைக்கு கடன் இந்தியா கிடுக்கிபிடி!

புதுடில்லி, மார்ச் 07

இலங்கை அரசாங்கம் கோரிய 100 கோடி டொலர்களை கடனாக வழங்குவதற்கு இந்தியா கடும் நிபந்தனைகளை விதித்துள்ளதாக அறிய வருகின்றது. 15

## டிப்பர் மோதித் தள்ளியதில் சிறுமிகள் இருவர் படுகாயம்!

முல்லைத்தீவு, மார்ச் 07

சைக்கிளில் தனித் தனியாகப் பயணித்துக் கொண்டிருந்த சிறுமிகளான சகோதரிகளை டிப்பர் வாகனம் மோதித் தள்ளியதில் அவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

மாங்குளம் - முறிகண்டி - செல்வபுரம் பகுதியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

குடும்ப தேவைக்காகக் கொள்வனது செய்த பொருட்களுடன் சைக்கிள்களில் சென்று கொண்டிருந்த சகோதரிகளே இவ்வாறு படுகாயமடைந் 15

## கொழும்பு - யாழ்ப்பாணம் இரவு நேர ரயில் சேவை!

கொழும்பு, மார்ச் 07

வெள்ளவத்தையில் இருந்து யாழ்ப்பாணம் வரை புதிய ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கு புகையிரதத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, வெள்ளிக்கிழமை வெள்ளவத்தையில் இருந்து இரவு 10 மணிக்கு புறப்படும் ரயில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை அதிகாலை அடையும். பின்னர் ஞாயிற்றுக்கிழமை இரவு 10.00 மணிக்கு யாழ்ப்பா 15

## இலங்கையர்களின் பிரச்னைகளுக்கு உள்ளகப் பொறிமுறையிலேயே தீர்வு

### ஜெனிவாவில் நீதி அமைச்சர் அலி சப்ரி

ஜெனிவா, மார்ச் 07

இலங்கையர்களுக்குள் காணப்படும் பிரச்னைகளை உள்ளகப் பொறிமுறையில் தீர்த்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிற்செல் பச்லெட் அம்மையார் உட்பட ஐ.நா.மனித உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் சர்வதேச சமூகத்தினர், புலம்பெயர் தரப்பினர் உள்ளிட்டவர்களிடத்தில் எடுத்துரைத்துள்ளோம் என்று நீதி 15



## 3 மாதங்களுக்குள் உயர்தர பரீட்சை பெறுபேறுகள்!

கொழும்பு, மார்ச் 07

நடைபெற்று முடிவடைந்துள்ள க. பொ. த. உயர்தர பரீட்சை பெறுபேறுகளை 3 மாதங்களுக்குள் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 15

## டெங்கு காய்ச்சலால் குழந்தை உயிரிழப்பு

தென்மராட்சி, மார்ச் 07

டெங்கு காய்ச்சலால் தென்மராட்சி - மீசாலை வடக்கை சேர்ந்த ஒன்றரை வயது குழந்தை ஒன்று உயிரிழந்தது.

வாகீசன் விதுசன் என்ற குழந்தையே நேற்று முன்தினம் இரவு உயிரிழந்த 15

## வவுனியா விபத்தில் தந்தை, மகன் பலி!

### மக்களின் கோபத்தால் பதற்றம்!



வவுனியா, மார்ச் 07

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற விபத்தில் தந்தையும் மகனும் உயிரிழந்தனர். இதனால், ஆத்திரமடைந்த அந்தப் பகுதி மக்களால் அங்கு பதற்ற நிலை நீடித்தது.

குருக்கள்புதுக்குளம் பகுதியில் மன்னார் பறையனாலயங்குளம் பிரதான வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் இந்த விபத்து 15

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 07

நாட்டின் சகல பாடசாலைகளும் 2021 கல்வியாண்டுக்கான மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைக்காக இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

இது தொடர்பில் கல்வி அமைச்சு விடுத்த அறிவிப் பில், 15



## அமெரிக்க இராஜதந்திரிகள் இலங்கைக்கு வருகின்றனர்!

கொழும்பு, மார்ச் 07

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உயர் மட்ட அதிகாரிகள் இருவர் இலங்கை வரவுள்ளனர்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின அரசியல் விவகாரங்களுக்கான 15

### பங்காளி கட்சிகள் மீதான அதிருப்தி

## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்ட கூட்டத்திலும் எதிரொலிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 07

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக் குழு கூட்டத்திலும் பங்காளிக் கட்சிகள்மீது கடும் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன், 4 வருடத்தை பூர்த்தி செய்த உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மீதமுள்ள ஓர் ஆண்டு காலத்தை போனஸ் ஆசனத்துக்காக பெயரிடப்பட்டவர்களுக்கு விட் 15

## ம. உ. பேரவையின் அறிக்கை காலத்துக்குக் காலம் வருவதே

### அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

வவுனியா, மார்ச் 07

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை காலத்திற்கு காலம் வருவதே. எனினும் இங்கு எவ்வாறான நடவடிக்கைகள் உள்ளன என்பதிலேயே கூடுதல் கவனம் வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று வவுனியாவில் தனது ஈ. பி. டி. பி. கட்சியின் உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் 15

## காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கே? பாதிக்கப்பட்டோருக்கு நீதி அவசியம்!

### மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்து

ஜெனிவா, மார்ச் 07

முக்கிய அரசு நிறுவனங்களில் இன, மத, தேசிய வாதம் மேலும் வெளிப்படையாக தெரிகிறது. இதனால், சிறுபான்மை இனத்தவர் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுவதும் - அஞ்சுவதும் அதிகரித்து, நல்லிணக்கம் பாதிக்கப்படு 15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

இந்த அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர் ஒருவரை கடந்த வாரம் கொழும்பில் சந்தித்த நண்பர் ஒருவரை ஊர்க்குருவி அண்மையில் சந்தித்திருந்தது.

நாடு எதிர்கொள்கின்ற பல்வேறு நெருக்கடிகளையும் ஒரு சில மாதங்களில் ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிடலாம் என்று அந்த அரச பிரமுகர் நம்பிக்கை வெளியிட்டாராம்.

நமது மக்கள் பழையவற்றை இலகுவில் மறந்துவிடுவார்கள். ஒரு தேர்தல் நடந்தால் அந்தத் தேர்தல் நடப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முதல் என்ன நடந்தது என்பதுதான் அவர்களுக்கு நினைவில் நிற்கும். எனவே, அரசாங்கம் மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டது என்று சொல்லப்படுவதெல்லாம் ஊடகங்களாலும், எதிரணியினராலும் மிகைப்படுத்தப்பட்ட தகவல்கள் என்றாராம் அந்த ‘முக்கிய’ அரசு பிரமுகர்.

அரசு செல்வாக்கை இழந்துவிட்டதா இல்லையா என்பதையெல்லாம் இனி நடக்கும் தேர்தல் ஒன்றுதானே முடிவு செய்யும். அதுவல்ல நாம் சொல்ல வருவது.

இந்த மக்களின் மறதி என்பது, நாம் ஏதோ நமது மக்கள் தான் அப்படி என்றால், எல்லா மக்களும் அப்படித்தான் என்பதை இதன்மூலம் அறியமுடிந்தது.

ஏனெனில், நமது அரசியல்வாதிகள்தான் எந்த விடயங்களையும் பொருட்டாக எடுத்துக்கொள்வதில்லை.

ஒரு விடயத்தை ஒருதடவை சொல்வதும், அதன் பின்னர் அப்படி சொன்ன விடயத்திற்கு நேர்மாறாக இன்னுமொரு விடயத்தை சொல்கின்றபோதும், அவர்கள் பழைய விடயங்களை மக்கள் மறந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையிலேயே சொல்வதுண்டு.

அரசின் அந்த முக்கிய பிரமுகரின் நம்பிக்கை, ஒரு சில மாதங்களில் நாடு வழமைக்கு திரும்பிவிடலாம் என்பதாக இருந்ததையும், இந்த ஆண்டுக்குள் மாகாண சபை தேர்தல் நடைபெறும் என்று அமைச்சர்கள் சிலர் கூறிவருவதையும் நோக்குகின்றபோது, அதற்கு சாத்தியம் இருப்பதாகவும் தோன்றுகின்றது.

உக்ரைன் நெருக்கடி இலங்கைமீதான கவனத்தை ஜெனிவாவில் திசை திருப்பியிருந்ததால் இலங்கைக்கு எதிராக எதுவும் நடக்காது என்று இந்த மாநாட்டிற்காக ஜெனிவா சென்றிருந்த நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருந்தார்.

அவரது தகவல் ஒரு தகவலை நமக்கு சொல்கின்றது. ஜெனிவாவின் அடுத்த கூட்டத் தொடர் செப்ரெம்பரில் நடக்கும்போது அதனை கடந்து செல்வது சிறீலங்காவுக்கு இன்னும் அழுத்தமாக இருக்கும்.

எனவே, அதற்கிடையில் பயங்கரவாத தடைச் சட்டத்தில் தாங்கள் செய்ய நினைக்கின்ற திருத்தங்களைச் செய்துவிட்டு, அதனை பாராளுமன்றில் நிறைவேற்ற அரசாங்கம் முயற்சிக்கலாம். அதேவேளை, மாகாண சபைக்கான தேர்தல் அறிவிப்புக்களைச் செய்து, அதனையும் தங்கள் முன்னேற்றமாக காட்ட அரசாங்கம் முயற்சிக்கலாம்.

அரச தரப்பிலிருந்து இந்த மாகாண சபைக்கான தேர்தல் ஆயத்தங்கள் தொடங்கிவிட்டதாகவே தெரிகின்றது.

யாழ்ப்பாணத்தில் அரச ஆதரவு அரசியல்வாதிகளிடையே நடக்கும் குத்துவெட்டுக்களை பார்க்கின்றபோது அப்படித்தான் தோன்றுகின்றது.

அண்மையில் தனது செல்வாக்கை தூக்கிக் காட்டுவதற்காக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்திருந்தார் அங்கஜன் இராமநாதன். கூடவே, தனது மைத்திரி விசுவாசத்தையும் அதன்மூலம் அவர் காட்டத்தவறவில்லை.

எதிர்வரும் தேர்தல்களில் சுதந்திரக் கட்சி தனி ஆவர்த்தனம் செய்யும் என்று எதிர்பாக்கப்படும் நிலையில், அவருக்கு போட்டியாக அரசியல் காய் நகர்த்தவே பொதுஜன முன்னணி முயற்சிப்பதாக தெரிகின்றது.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டங்களுக்கு தனது பிரதிநிதியாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தனது இணைப்புச் செயலாளரான தமிழ் இளைஞர் ஒருவரை நியமித்திருக்கிறார்.

அந்த நியமனம் தொடர்பாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகளை மறுதலித்த அங்கஜன், அதற்கு எதிராக அல்லது அந்த செய்தியில் உள்ள தவறுகளை மாத்திரம் சுட்டிக்காட்டியிருக்கலாம். மாறாக, அவ்வாறு நியமிக்கப்பட்ட இளைஞர்மீது அவர் தனிப்பட்ட வகையில் தாக்குதல் தொடுத்திருப்பது, எங்கே அவரும் அரசியலில் குதிக்கப்போகிறாரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசிய ஆதரவு கட்சிகள் சுமார் இரண்டு இலட்சம் வாக்குகளைப் பெற்ற அதேவேளையில், அரச ஆதரவு அல்லது தேசியக் கட்சிகளின் ஆதரவு பெற்ற வேட்பாளர்கள் சுமார் ஒன்றரை இலட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தனர்.

இந்த ஒன்றரை இலட்சம் வாக்குகளை குறிவைத்து இனி அரச ஆதரவு கட்சிகள், குழுக்களிடையே இதுபோன்ற போட்டிகள், குத்துவெட்டுக்கள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

**- ஊர்க்குருவி**

# கூட்டமைப்பின் உறுப்பினர்மீதான தாக்குதலுக்கு முன்னணி கண்டனம்!



யாழ்ப்பாணம், மார்ச் 07

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் அவரின் குடும்பத்தவர்கள்மீது பொலிஸார் நடத்திய தாக்குதலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டித்துள்ளது.**

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் க. சுகாஷ் விடுத்துள்ள அறிக்கையில்,

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜோன் ஜிப்ரிக்கோ மற்றும் அவரின் சகோதரிகளை அரச ஆதரவுக் கட்சியினரும் பொலிஸாரும் இணைந்து தாக்குதல் நடத்தியமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

“இது அரச அராஜகத்தையும் பொலிஸாரின் வக்கிரத்தையும் அரச ஆதரவுக் கட்சியான சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொடூர முகத்தையும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்தத் தாக்குதலை ஜனநாயகத்தையும் சட்ட திட்டங்களையும் மதிக்கின்ற அரசியல் இயக்கமான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒருபோதும் ஏற்கமாட்டாது.

“தனியாள் பிரச்னைகள் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகத் தீர்க்கப்பட வேண்டுமே தவிர, காடைத்தன மாகவல்ல என்பதைச் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகின்றோம். சட்டத்தைக் கையிலெடுத்தவர்களுக்கு எதிராகச் சட்டம் தன் கடமையைச் செய்ய வேண்டும் என்று கோருகின்றோம். அரச அராஜகத்தை நாங்கள் ஒருபோதும் மௌன மாகக் கடந்துசெல்லத் தயாரில்லை” - என்றுள்ளது.

## வீட்டில் வெடிபொருட்கள் கணவன், மனைவி கைது

புதுக்குடியிருப்பு, மார்ச் 07

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை பகுதியில் வீட்டில் வெடிபொருட்கள் வைத்திருந்த கணவனும் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்படி வீட்டில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, கணவனும் மனைவியும் போரின் போது கைவிடப்பட்ட வெடிகுண்டுகளை உடைத்து வீட்டில் வைத்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், வெட்டி எடுக்கப்பட்ட குண்டுகள் சிலவும் மீட்கப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட குடும்பப் பெண் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டவேளை அவரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட குடும்பத் தலைவரை புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் 72 மணித்தியாலங்கள் தடுத்துவைத்து விசாரணைக்குட்படுத்த நீதிமன்றின் அனுமதியைப் பொலிஸார் பெற்றுள்ளனர். (ஐ)

## தமிழார்வலர் சிவா பிள்ளை பாராட்டி கௌரவிக்கப்பட்டார்!

யாழ்ப்பாணம், மார்ச் 07

லண்டன் கணனி பொறியியலாளரும் தமிழார்வலருமான சிவா பிள்ளை (கணபதிப்பிள்ளை சிவகுருநாதபிள்ளை) அவர்களுக்கான பணி நயப்பு விழா கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் ச. வேலழகன் தலைமையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெற்றது.

கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை என்பவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர் லயன் மருத்துவர் வை. தியாகராஜா, கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசன் யாழ்ப்பாண பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர்களான கலாநிதி கி. அருட்செல்வி, ஜனனி தேவானந், கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்பு கிளை செயலாளர் விக்னேஸ்வரன்மூர்த்தி உள்ளிட்ட பலர் பாராட்டுரைகளை ஆற்றினர்.

கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் பொறியியலாளர் சி. சுகிர்தரூபன் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார். (ஐ)

# இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்துக்கு பெருகுகின்றது மக்கள் ஆதரவு!

கொழும்பு, மார்ச் 7

மின்வெட்டு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுத்தருமாறு கோரி கொழும்பு, கொகுவளை பிரதேசத்தில் ஏழு இளைஞர்கள் இணைந்து ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் ஐந்தாவது நாளாக நேற்று முன்தினமும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள், “இலங்கை பற்றி பேசுங்கள்“, “போதும் போதும்“, “விழித்தெழுவோம்“ “சிறப்பாக செய்தது போதும்“ உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்துரைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள், நாட்டில் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.



குறிப்பாக எமது பணிகளை முறையாக ஆற்ற முடியவில்லை. தொடர்ச்சியாக இதனை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எனவே ஏழு இளைஞர்கள் இணைந்து திங்கட்கிழமை முதல் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். இரண்டாவது நாள் ஆர்ப் பாட்டத்தில் 30 பேர் கலந்து கொண்டனர். அதன் பின்பு 50 பேர் வந்தனர். தற்போது ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை நூறைக் கடந்துள்ளது.

நாங்கள் எந்த கட்சியையும் எந்தக் குழுக்களையும் சேர்ந்தவர்கள் அல்ல. நாம் இந்த இடத்தில் நின்றுக்கொண்டிருந்ததை கண்டே அநேகமானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றுள்ள அனைவரும் தாம் எதிர்கொள்ளும் பிரச்னைகளை வெளிப்படுத்துவதற்காகவே இந்த இடத்தில் கூடியுள்ளனர். நாம் எதிர்கொண்டு இருக்கும் பிரச்னைகளிலிருந்து எம்மை வெளியில் கொண்டுவருமாறே நாம் அரசாங்கத்தை கோருகின்றோம் - என்றனர். (கே)

ஈழநாடு
Eelanadu
07.03.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், மாசி 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# இது அமெரிக்க எதிர்ப்பா?

பதவி நீக்கப்பட்ட விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்பன்பில ஆகியோர் - நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவை, “அசிங்கமான அமெரிக்கன்“ என்று விமர்சித்திருக்கின்றனர். தங்களுடைய பதவி பறிக்கப்பட்டதற்கு, பஸில் ராஜபக்ஷவே காரணமென்று கூறியிருக்கும் அவர்கள், அதற்குக் காரணமான பஸில் ராஜபக்ஷவை கடுமையாக சாடியிருக்கின்றனர்.

கடந்த காலங்களில் தங்களின் அரசியல் எதிரிகளை விமர்சிப்பதற்கு அமெரிக்க முகவர்கள், டொலர் காக்கைகள் போன்ற சொற்களை விமல் வீரவன்ஸ தேர்தல் மேடைகளில், போதியளவு பயன்படுத்தியிருக்கின்றார். அவ்வாறெல்லாம் அவர்கள் கூறுகின்ற போது, ராஜபக்ஷக்கள், அதனை புன்முறுவலோடு ரசித்துக் கொண்டிருந்திருக்கின்றனர். அன்று மற்றவர்களை நோக்கிக் கூறப்பட்ட விடயங்கள், இப்போது அவர்களை நோக்கியே திரும்பியிருக்கின்றது. ஒரு தேர்தல் இடம்பெற்றால் அதிக புதினங்களை மக்கள் காணநேரிடும்.

ஆனால், வேடிக்கையான விடயம் என்னவென்றால் - அவர்கள் அசிங்கமான அமெரிக்கன் என்று விமர்சிக்கும், பஸில் ராஜபக்ஷவோ, புதுடில்லியுடன் நெருக்கமாக செயல்படுவது பற்றியே தீவிரமாக அலைந்து கொண்டிருக்கின்றார். இந்தியாவின் ஆதரவை பெறுவதில் கணிசமான முன்னேற்றங்களும் ஏற்பட்டிருப்பதாகவே தெரிகின்றது. ஏனெனில், பிராந்திய யதார்த்தத்தை புரிந்து கொண்டு செயல்படுவதில் அவர்கள் அதிக கரிசனை காண்பிப்பது போன்றே தெரிகின்றது.

அதிகாரத்திற்கு வருவதற்காக எதனையும் பேசலாம் என்னும் நிலைமையிருக்கின்றபோது, எய்தவர்களையே நோக்கியே அம்பு திருப்புவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அதிலும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இது அடிக்கடி நிகழும் ஒன்றாகும். தங்களின் அரசியல் எதிரிகளை மக்கள் மத்தியில் கேவலப்படுத்துவதற்காக, அவர்களை றோவின் கைக்கூலிகள் - இந்திய முகவர்கள் என்று கூறுவது சாதாரணமான ஒன்று. ஆனால், அவ்வாறு கூறுபவர்களே - பின்னர் இந்திய தூதரகத்திற்கு சென்று நாங்கள் உங்களுக்கு எதிரானவர்கள் அல்லவென்று மன்றாடுவதுமுண்டு.

பங்காளிகளுக்கும் பஸில் ராஜபக்ஷவிற்கும் இடையில் முரண்பாடுகள் முற்றியிருந்த நிலையில், அண்மையில் விமல் வீரவன்ஸவும் இந்திய தூதுவரை பூங்கொத்துடன் சந்தித்திருந்தார். பொதுவாகப் பிரச்னைகளின்போது, அனைவரும் ஒருமுறையாவது இந்திய தூதுவரை சந்திப்பதை ஓர் அரசியல் சம்பிரதாயமாகவே கொண்டிருக்கின்றனர். தலதா மாளிக்கைக்கு செல்வது போன்று. ஆனால், அவ்வாறனவர்களே தேர்தல் மேடைகளில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் எதிராக உரத்துப் பேசுபவர்களாகவும் இருப்பர்.

இதனை சம்பந்தப்பட்ட தூதரகங்கள் ஒரு நகைச்சுவைபோல் அவதானித்துக் கொண்டிருக்கும். ஆனால், இவர்களின் பேச்சுக்களை உண்மையென்று நம்பும் மக்களோ, ஏமாந்து போவர். ஒவ்வோர் அரசியல் நாடகங்களிலும் நகைச்சுவை பாத்திரம் ஏற்பவர்கள் மக்கள் மட்டுமே. ஆனால், மக்களோ தாங்கள் உண்மையாகவும் உறுதியாகவும் இருப்பதாக நம்பிக் கொண்டிருப்பர். மக்கள் சிந்திக்காத வரையில், அவர்கள் எப்போதும் நகைச்சுவையாளர்தான். சிந்திக்க மறுக்கும் மக்கள் அதிகம் இருக்கின்ற சூழலில், எவரையும் - எவரும் கைக் கூலிகளென்றும் முகவர்களென்றும் தூற்றுவதற்கு தயக்கம் காட்ட வேண்டியதில்லை.

# விஜயதாஸ ராஜபக்ஷவின் ஆரூடம்!



**அலசுவது இராஜதந்திரி**

இன்றைய அரசாங்கம் இன்னும் சில மாதங்களில் கவிழ்ந்து விடும் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கூறியிருப்பது வேறு யாருமல்ல. ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினரான விஜயதாச ராஜபக்ஷ என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய அரசின்மீது ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கடும் அதிருப்தி கொண்டுள்ளதையே விஜயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளமை புலப்படுத்துகின்றது. பெயரளவில் மட்டுமே ஆட்சியாளர்கள் ஓர் உறுதியான ஆட்சி நிலவுவது போன்று காட்டிக்கொண்டிருக்கின்றனர். ஆனால், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பலர் தாம் எதிர்நோக்கியுள்ள நிலை குறித்து “மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாது“ இருக்கின்ற ஒரு நிலையிலேயே காணப்படுகின்றனர்.

ஏற்கனவே, அமைச்சர்களாக இருந்த விமல் வீரவன்ஸ, மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் அரசை விமர்சித்ததன் காரணமாக அவர்களின் அமைச்சு பொறுப்புகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஆளும் தரப்பைச் சேர்ந்த பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயமாக இயங்க முடிவு செய்திருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் வீட்டில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றையடுத்தே அவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர்.

எனவே, தற்போது ஆளும் கட்சிக்குள்ளேயே அதிருப்தியான சூழ்நிலைகள் தோற்றம் பெற ஆரம்பித்துள்ளதையடுத்து எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தமது தரப்பிலிருந்து அரச தரப்பில் நிகழும் தவறுகளை சுட்டிக்காட்டும் நிலை மாறி ஆளும் கட்சியினரே தமது தரப்பில் நிலவுகின்ற குறைபாடுகளை சுட்டிக்காட்டும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டு மக்களைப் பொறுத்தவரை சொல்லொணாத பொருளாதார சுமைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்விநியோகத்தில் காணப்படும் ஒழுங்கற்ற தன்மை ஆகியவை நாட்டு மக்களை பெரும் இன்னல்களுக்குள்ளாக்கியுள்ளன.

நாட்டில் பொருளாதார சுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலை காரணமாக பொதுமக்கள் பொறுமை இழந்து வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் குதிக்க ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சக்தியின் பெண்கள் அணியான ஐக்கிய மகளிர் சக்தி ஜனாதிபதிக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிறேமசந்திர முன்னின்று நடத்தியிருந்தார். ஏராளமான குடும்பப் பெண்கள் இந்த ஆர்ப் பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். பொலிஸார் தடைகளைப் போட முயற்சித்த போதிலும் அவற்றையெல்லாம் தாண்டி ஹிருணிகா பிறேமசந்திர தமது ஆர்ப்பாட் டத்தை முன்னெடுத்திருந்தார்.

எனவே ஒரு புறம் வடக்கு - கிழக்கு மக்களின் மனிதாபிமானப் பிரச்னைகளை அரசு தீர்க்கத் தவறி அந்த மக்களின் அதிருப்தியை சம்பாதித்துள்ளதோடு போருக்குப் பின்னர் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் என்பவற்றை ஏற்படுத்தத் தவறியமை காரணமாக சர்வதேச சமூகத்தின் கண்டனத்துக்கும் உள்ளாகியுள்ளது.

இந்தத் தடவை ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடரை முன்னிட்டு ஐ. நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிற்செல் பச்லெட்டின் இலங்கை தொடர்பான அறிக்கை காரசாரமானதாகவும் இலங்கை அரசு பொறுப்புக்கூறலிலிருந்து எவ்வளவு தூரம் விலகிச்சென்றுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுவதாக இருக்கின்றது.


தமிழ் அரசியல் கைதிகள் நீதி விசாரணையின்றி நீண்ட நெடுங்காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அதேசமயம் தென்னிலங்கையில் பெரும் குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டவர்கள் உயர் நீதிமன்றம் விதித்த தண்டனைகளிலிருந்துகூட விலக்களிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு விலக்களிக்கப்பட்டவர்களில் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிறேமசந்திரவின் தந்தையாரன பிறேமச்சந்திராவை சில வருடங்களுக்கு முன்னர் பகல் வேளை பலர் முன்னிலையில் சுட்டுப்படுகொலை செய்து சிறைவாசம் அனுபவித்த துமிந்த சில்வாவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பின்ணியிலேயே பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதி ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்றால் போல இயங்கிவரும் இன்றைய அரசு விரைவில் வீழ்ச்சியடையும் என்று ஆரூடம் கூறியுள்ளார்.

தென்னிலங்கையை பொறுத்தவரை எதிர்வரும் நாட்களில் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெறும் அறிகுறிகளே பலமடைந்துள்ளன.

இந்நிலையில் விஜயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டது போல இன்னும் சில மாதங்களிலன்றி எத்தருணத்திலும் இன்றைய ஆட்சி மண்கவ்வினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே குறிப்பிடலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு



மாசி - 07 திங்கட்கிழமை
பிலவ வருடம் - மாசி 23
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : பஞ்சமி




**மேடம்**
மற்றவர் தலையீட்டால் ஏற்பட்டிருந்த பிரச்னைகள் நீங்கும். பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. நிதான மான நன்மை வரும். வீண் செலவுகள் எதுவும் ஏற்பட்டாலும் சமாளித்து வெல்வீர்கள்.

**இடபம்**
கடினமான உழைப்பால் அபார வெற்றி காண்பீர்கள். உங்களின் முயற்சி காரணமாக வருமானம் அதிகரிக்கும். சில காலமாக சிரமப்படுத்திய உடல் உபாதை நீங்கும்.

**மிதுனம்**
உடல்நலம் லேசாக பாதிக்கப்பட்டாலும் அதற்கு நிவாரணம் கிடைக்கும். பிறரிடம் பேசும்போது மிகுந்த பொறுமை தேவை. முன்பு நீங்கள் இழந்திருந்த பணம் இன்று திரும்பக் கிடைக்கும்.

**கடகம்**
இன்று கடன் வாங்காமல் செலவைச் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுக்காக வீண் அலைச்சல் மேற்கொள்ள வேண்டாம். குடும்பத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது நன்மை தரும்.

**சிம்மம்**
இனிய நாள். நெருங்கியவர்களுடன் பகை வேண்டாம். உறவினர் இடையே ஒற்றுமை குறைய நீங்கள் காரணமாக இருக்க வேண்டாம். வீண் செலவுகளும், சிலரால் பிரச்னைகளும் ஏற்படக்கூடும்.

**கன்னி**
பெற்றோருக்குப் பெருமிதம் தரும் செயல்களை செய்வீர்கள். நண்பர்கள், உறவினர்களால் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமை இழக்க வேண்டாம்.

**துலாம்**
இளைய சகோதரர்களுக்கு உங்கள் மூலம் ஆதாயம் ஏற்படும். மன உறுதியால் திட்டமிட்ட விஷயங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். மதியத்திற்கு மேல் வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**விருட்சிகம்**
கூட்டு முயற்சியில் ஈடுபட்டவர்களுக்கு வெற்றி கிடைக்கும். முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். சில உறவினர்கள் அசத்துவார்கள். அசையா சொத்துக்கள் வாங்குவது பற்றிய குழப்பங்கள் தீரும்.

**தனுசு**
நீங்கள் எதிலும் அவசரப்படாமல் அடி எடுத்து வைக்க வேண்டும். குடும்பம் தொடர்பாக எடுக்கும் முக்கிய முடிவுகள் நிறைவேறும். குடும்பத்தினருடன் இருந்து வந்த பிடிவாதப்போக்கு மாறும்.

**மகரம்**
எதிர்பாராத ஆதாயத்தினால் மனதில் குதூகலம் ஏற்படும். வேலை விஷயமாக வெளியூர் சென்றவர் திரும்புவர். எதிலும் கையெழுத்துப் போடுவதற்கு முன் எச்சரிக்கையுடன் இருங்கள்.

**கும்பம்**
பிரியமானவர்களின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தரும். பணியாளர்கள் ஊக்கத்துடன் செயல்பட்டு பாராட்டு பெறுவீர்கள். குடும்ப விஷயத்தில் பிறரது தலையீட்டை அனுமதிக்க வேண்டாம்.

**மீனம்**
குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். நட்பு வட்டம் விரிவடையும். பிள்ளைகள் எதிர்பார்த்த விஷயம் அனுகூலமாக முடியும். மற்றவருக்கு உதவுவதால் அலைச்சலும், செலவுகளும் ஏற்படும்.

# உக்ரைனிலிருந்து தமிழக மாணவர்கள் சில தினங்களில் அழைத்து வரப்படுவர்

## வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி

சென்னை, பெப். 07

உக்ரைனில் சிக்கியுள்ள தமிழகம் உள்ளிட்ட இந்திய மாணவர்கள் அனைவரையும் ஒரு சில தினங்களுக்குள் அழைத்து வரப்படுவார்கள் என மத்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி அளித்துள்ளார்.

உக்ரைனிலிருந்து இந்தியா திரும்பிய மாணவர்களை புது டில்லியில் தமிழ்நாடு சிறப்புக் குழுவினர் சந்தித்து பேசினர். உக்ரைனிலிருந்து இன்று இந்தியா திரும்பிய 444 தமிழ்நாட்டு மாணவர்களை, தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு உறுப்பினர்களான எம்பிக்கள் திருச்சி சிவா, எம்.எம்.அப்துல்லா, கலாநிதி வீராச்சாமி ஆகியோர் சந்தித்து பேசினர்.

மாணவர்களின் நலனை விசாரித்த அவர்கள், இதுவரை 777 தமிழ்நாட்டு மாணவர்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், மேலும் அங்குள்ள அனைத்து மாணவர்களையும் மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினர். தொடர்ந்து, மாணவர்களை டில்லியிலிருந்து அழைத்து செல்ல தனி விமானத்தை தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

முன்னதாக, வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை தமிழ்நாட்டின் சிறப்பு குழுவினர் சந்தித்தனர். அதன் பின் பேசிய, எம்.பி. திருச்சி சிவா, உக்ரைனில் சிக்கியுள்ள இந்திய



மாணவர்கள் மாணவர்களை மீட்பதற்காக உக்ரைனில் ஒரு சில இடங்களில் போர் நிறுத்தப்பட்டு இருப்பதாகவும், ஓரிரு நாட்களில் மாணவர்கள் அனைவரும் முழுமையாக மீட்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

# மேகேதாட்டு அணை விவகாரத்தில் கர்நாடக முயற்சியை முறியடிப்போம்

## வைகோ

சென்னை, பெப். 07

மேகேதாட்டு அணை விவகாரத்தில் கர்நாடக மாநிலத்தின் முயற்சியை முறியடிப்போம் என்று ம.தி.மு.க. செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்ட அறிக்கையில், "கர்நாடக மாநில முதல்வர் பசவராஜ் பொம்மை, சட்டமன்றத்தில் தாக்கல் செய்த வரவு -செலவுத் திட்ட அறிக்கையில், மேகேதாட்டு அணை



கட்டுவதற்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கி உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மத்திய பா.ஜ.க. அரசு, கர்நாடக மாநிலத்திற்கு மறைமுகமாக ஆதரவு அளித்து வருவதால், மேகேதாட்டு அணை கட்ட கர்நாடக அரசு தற்போது ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருப்பதாக அறிவித்து இருக்கிறது. மத்திய பா.ஜ.க. அரசு இதில் திட்டவட்டமான அறிவிப்பை வெளியிட வேண்டும். கர்நாடக மாநிலத்தின் முயற்சியை முறியடித்திட தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை துரிதப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# ராஜபாளையத்தில் சசிகலாவுக்கு அ.தி.மு.க கொடியுடன் வரவேற்பு

சென்னை, பெப். 07

ராஜபாளையம் பெரிய மாரியம்மன் கோயில் அருகே ஜெயலலிதாவின் தோழி சசிகலா வருகை தந்தபோது, தேவர் சிலை அருகே அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. சாலை முழுவதும் அ.தி.மு.க. கட்சிக் கொடியுடன் தொண்டர்கள் வரவேற்பு அளித்தனர்.

சசிகலா வந்தவுடன் காரின் முன்பாக திரண்ட தொண்டர்கள் தேவர் சிலைக்கு மாலை அணிவிக்க ஏற்பாடு செய்து இருந்தனர். ஆனால், சசிகலா காரை விட்டு இறங்காமல் சென்றதால் காரை மறித்து மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து பொலிஸார் அவர்களை அப்புறப்படுத்தினர். அப்போது தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதனால் சுமார் 20 நிமிடம் போக்குவரத்து பாதித்தது. இதைத் தொடர்ந்து சசிகலா தேவர் சிலைக்கு மாலை அணிவித்த பிறகு அவரை வழியனுப்பி வைத்தனர்.



இதனால் ராஜபாளையம் - தென்காசி சாலையில் சுமார் அரைமணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# கட்சியிலிருந்து என்னை நீக்கியது செல்லாது; சசிகலாதான் எனக்கு பொதுச் செயலாளர்!

## போர்க்கொடி தூக்குகிறார் ஓ.பன்னீர்செல்வத்தின் தம்பி

சென்னை, பெப். 07

கட்சியில் இருந்து நிர்வாகிகளை தொடர்ந்து நீக்கம் செய்வது நல்லதல்ல என்று ஓ. பன்னீர்செல்வத்தின் தம்பி ஓ.ராஜா கூறினார். கட்சியில் இருந்து தன்னை நீக்கப்பட்டமை செல்லுபடியாகாது எனவும் அவர் தெரிவித்தார்.

கட்சியில் இருந்து நீக்கப்பட்ட ஓ.பன்னீர்செல்வத்தின் தம்பி ஓ.ராஜா பெரியகுளத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:-

அ.தி.மு.க.வுக்கு சசிகலா தலைமை ஏற்க வேண்டும் என்று தான் அவரை நேரில் சந்தித்தேன். தற்போதைய இரட்டை தலைமையின் செயல்பாடுகள் எப்படி இருக்கிறது என்பது இந்த தேர்தல் முடிவுகள் மூலம் அனைவருக்கும் தெரியும். அனைத்து இடங்களிலும் தோல்வி அடைந்துள்ளது.

தற்போது அ.தி.மு.க.வில் கோஷ்டிகளாக உள்ளனர். ஒரு கட்டுப்பாடும் கிடையாது. எதிரெதிராக பேட்டி மட்டுமே கொடுக்கின்றனர். கட்சியில் இருந்து நிர்வாகிகளை தொடர்ந்து நீக்கம் செய்வது நல்லதல்ல. எனக்கு பொதுச் செயலாளர் சசிகலாதான். என்னை கட்சியில் இருந்து நீக்கியது செல்லாது. இவ்வாறு அவர் கூறினார்.

## அன்பு செய்வோம்



வாழ்க்கை என்பது இறைவனின் கொடை. இந்த வாழ்வு அவரது அன்பு. வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் தீர்ப்பிடும் கடவுள் முன் நிற்கின்றோம். எனினும் நம் ஒவ்வொரு நினைவு, சொல், செயல் அனைத்தும் அன்றாடம் நமக்கு தீர்ப்பு அளிக்கின்றன. எனினும் இறுதித் தீர்ப்பு உள்ளது. அதில் அனைவரும் பங்குபெறுவர் என்பது உண்மை. இவ் இறுதித் தீர்ப்பு பற்றி தவக்காலத்தில் தியானம் என்பது நம் அன்றாட வாழ்வளம் பெற, அன்றாடம் செயல்கள் செம்மையுடன் நடக்க திண்ணமாக உதவும்.

இறுதித் தீர்ப்பு வேளையிலும் பலிகள், செபங்கள், வழிபாடு, தவம், ஒறுத்தல் முதலியவற்றுக்கு முதலிடம் அளிக்காது அன்பு வாழ்வுக்கே இயேசு முக்கியத்துவம் தருகின்றார். இவ்வன்பு பல வழிகளிலே வெளிப்படலாம். உணவு, நீர், வரவேற்பு, உடை, நோயில் சந்திப்பு, சிறையில் சந்திப்பு என்பனவாகும். இவைதான் இறுதித் தீர்ப்பில் நமக்கே உறுதுணையாய் இருப்பனவென்று கொள்ளுதல் வேண்டும். எனவே அன்பு செய்வோம். அன்பை என்றும் செய்வோம்.

அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா

## புதையல் தோண்டிய ஆறு பேர் கைது

கொழும்பு, மார்ச் 07

பதுளை கிராந்துருகோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெலன்வெள பிரதேசத்தில், புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஆறு பேர் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

25 - 27 வயதுகளையுடைய ஆறு பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்திய பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அத்துடன், மேலதிக விசாரணைகளையும் தொடர்ந்து வருகின்றனர். (கே)

### மனித உரிமைகள் பேரவையின்

# செப்ரெம்பர் தொடருக்காகவே 5 கட்சிகளும் கடிதம் அனுப்பின

### ரெலோ கட்சி புதுவிளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 07

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத் தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத் தொடருக்காகவே சர்வஜன வாக்கெடுப்பைக் கோரிய ஐந்து கட்சிகளின் கடிதமும் அனுப்பப்பட்டது என்று ரெலோ கட்சி விளக்கமளித்துள்ளது.**

டான் தமிழ் ஒளியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு ஒளிபரப்பான நெற்றிக்கண் நிகழ்ச்சியில் பங்கேற்ற அந்தக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் சபா. குகதாஸிடம் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் 49ஆவது கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டார். இந்த அறிக்கைக்கு பதில் அறிக்கையையும் இலங்கை அரசு அனுப்பிய பின்னர், ஆணையாளரின் அறிக்கையில் சேர்ப்பதற்கென கடந்த 25ஆம் திகதி அனுப்பப்பட்ட 5 தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒப்பமிட்டு கடிதம் அனுப்பியமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு விளக்கமளித்தார்.

மேலும், "மார்ச் மாத அமர்வுக்காக தமிழ்க்கட்சிகள் அனுப்பி வைத்த கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமே எடுத்துக்கொள்ளப்படும். கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் தமிழ்க் கட்சிகளால் (தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்து) அனுப்பி வைத்த விடயங்கள் தான், இந்த மார்ச் மாத அமர்வின் வாய்மூல அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆகவே, இப்போது சர்வஜன வாக்கெடுப்பை கோரி நாம் அனுப்பிய கடிதம் தொடர்பான விடயங்கள் செப் ரெம்பர் மாத அமர்வுக்கான அறிக்கையிலேயே உள்வாங்கப்படும்", என்று அவர் கூறினார். (ஐ)

# இழுவைமடி மீன்பிடி முறைமையை தமிழகத்தில் தடை செய்யவேண்டும்!

### ஸ்ராலினுக்கு வடக்கு மீனவர்கள் கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 07

நீண்டகாலமாக இடம்பெற்று வரும் இலங்கை இந்திய மீனவர் பிரச்னைக்கு தீர்வு பெற்றுத் தருமாறு கோரியும் இழுவைப் படகுகளுக்கு நடவடிக்கை எடுக்கக் கோரியும் மூன்று மாவட்டங்களின் கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் ஒன்றிணைந்து தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலினுக்கு ஊடகங்கள் வாயிலாக கடிதம் ஒன்றை வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் இவ்விடயத்தை தெரிவித்தனர்.

அந்தக் கடிதத்தில்,

வட இலங்கையின் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, மற்றும் முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலில் தங்கியிருக்கும் ஏறத்தாழ இரண்டு இலட்சம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த வேண்டுகோளை முன்வைக்கின்றோம். முப்பது வருடகால யுத்தத்தினால் சொல்லமுடியாத துயரங்களையும் அழிவுகளையும் நாங்கள் சந்தித்திருந்தோம். யுத்தம் காரணமாக வெளி மாவட்டங்களிலும் தென்னிந்தியாவிற்கும் என தொடர்ச்சியான இடப்பெயர்வுகளையும் உயிர் மற்றும் உடைமை இழப்புக்களையும் சந்தித்திருந்தோம்.

யுத்த காலத்தில் எமது சமூகத்திற்கு அடைக்கலம் தந்தமைக்குத் தமிழ்நாட்டு மக்களுக்கு முதற்கண் எமது நன்றிளைத் தெரிவிக்கின்றோம். யுத்தத்திற்குப் பின்பு எமது வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப கடுமையாக முயற்சித்த போதிலும் பல சவால்களையும் தோல்விகளையுமே நாம் சந்திக்க நேர்ந்தது. வருமானத்தின் வீழ்ச்சி மற்றும் பெரும் கடன் சுமை காரணமாக எமது இளந்தலைமுறை கடற்றொழிலையே கைவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. யுத்தத்திற்கு பின்பான இந்த சமூக, பொருளாதார சூழலுக்கான முக்கிய காரணம் தமிழ்நாட்டு இழுவைப்படகுகள்.

இந்த இழுவைப்படகுகள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி வலைகளை அறுத்துச்செல்வதனால் பெரும் இழப்புகள் ஏற்படுகின்றன.

மேலும், சொத்து இழப்புக்களைத் தவிர்க்க நாம் இழுவைப் படகுகள் வரும் நாட்களில் கடலுக்கு போகாமல் இருப்பதால் பெருமளவான வருமானத்தை இழக்கின்றோம். கடல் வளங்களைச் சுரண்டும் இழுவைமடிகளால் சிறு மீனவர்களின் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அழுலைமடி முறையால் வட இலங்கை மற்றும் தமிழ்நாட்டு சிறு கடற்றொழிலாளர்களின் எதிர்காலமே அழிக்கப்படுகின்றது.

இந்தப்பிரச்னை இலங்கை கடற்றொழிலாளருக்கும் தமிழ்நாட்டு கடற்றொழிலாளருக்கும் இடையில் இருக்கும் வரலாற்று ரீதியான உறவையே பாதிகின்றது. இழுவைப் படகுகளை முற்றாக நிறுத்துமாறு" இரு நாட்டு கடற்றொழிலாளர்களுக்கு மத்தியில் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோதிலும், அவற்றின் மூலமாக ஒரு தீர்வையும் எட்டமுடியவில்லை.

உண்மையில் இந்தப் பிரச்னைக்கான தீர்வு என்பது" இரு நாட்டுக் கடலிலும் இழுவைப் படகு முறையினைத் செய்வதாகும். எனினும் இந்த பிரச்னையைத் தீர்ப்பதற்கான அரசியல் விருப்பு என்பது இரு நாடுகளின் மத்திய மற்றும் மாநில அரசியல் தலைமைத் துவங்களிடம் இருக்கவில்லை.

முதலமைச்சராக பதிவியேற்ற பின்பு தென்னிந்தியாவில் வாழும் இலங்கை தமிழ் அகதி மக்களுக்காக நீங்கள் முன்வைத்த தீர்வுகளை அறிந்த நாம் உங்களுக்கு எமது நன்றிகளை கூறக் கடமைப்பட்டுள்ளோம். உங்களுடைய இவ்வாறான முற்போக்கான பார்வையில் தமிழ்நாட்டு இழுவைப் படகுகளால் பாதிக்கப்படும் வட இலங்கை கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளையும் கவனத்தில் கொண்டு இதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தீர்வுகளைப் பெற்றுத்தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.

இதேவேளை இக்கடித்தில் யாழ் மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் கையெழுத்திட்டுள்ளபோதும் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் கையொப்பம் இடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தீவகத்தின் பிரதேச செயலகங்களில் மின் தடையால் சேவைகள் பாதிப்பு!

### பொதுமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 07

தீவகப் பிரதேசங்களுக்கான ஊர்காவற்றுறை, காரைநகர் பிரதேச செயலகங்களில் மின்பிறப்பாக்கி இன்மையால் மின்சாரம் தடைப்படும் 5 மணிநேரமும் சேவையை பெற்றுக்கொள்ள முடியாமல் திரும்பி செல்லும் அவலம் இடம்பெறுவதாக மக்கள் கவலை வெளியிட்டனர்.

காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்களில் தினமும் காலை 8 மணியில் இருந்து பகல் ஒரு மணிவரை மின்சாரம் துண்டிக்கப்படுகின்றது. இதில், குறித்த பிரதேச செயலகங்களும் அடங்குகின்றன.

எனினும், யாழ். மாவட்டத்தில் ஏனைய பகுதிகளில் மின் தடை ஏற்பட்டாலும் பணிகள் தாமதமின்றி நடைபெறுகின்றன. ஆனால், மின் பிறப்பாக்கி இன்மையால் இந்த இரு பிரதேச செயலகங்களிலும் பணிகள் தடைப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், காரைநகர் பிரதேச செயலகம் அதனைப் பெறவும் எதுவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் சேவையைப் பெற வரும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று மக்கள் தெரிவிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, "ஊர்காவற்றுறை பிரதேச செயலக மின்பிறப்பாக்கியை திருத்துவதற்கு நடவடிக்கை இடம்பெறும் அதேநேரம் காரைநகருக்கு புதிய மின்பிறப்பாக்கி ஒன்றை கொள்வனவு செய்ய முயற்சிக்கப்படுகின்றது", - என்றார். (ஐ)

## போதைப் பொருள் விற்பனை; சகோதரன், சகோதரி கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 07

யாழ்ப்பாணத்தில் கேரள கஞ்சாவுடன் சகோதரனும் சகோதரியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - பொம்மை வெளியில் உள்ள அவர்களின் வீட்டில் வைத்தே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதான இருவரின் வீட்டில் இருந்தும் 200 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், இருவரும் போதைப் பொருளை விற்பனை செய்தபோதே கைது செய்யப்பட்டனர் என்றும் அவர்கள் கூறினர்.

கைதானவர்கள் இருவரும் 25, 27 வயதுகளை உடையவர்கள் என்றும், இவர்களின் தந்தை போதைப் பொருள் விற்பனை செய்த குற்றத்திற்காக ஏற்கனவே கைது செய்யப்பட்டு தற்போது சிறையிலுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# சகல மாவட்டங்களுக்கும் பிரதமர் பிரதிநிதியை நியமிக்க வேண்டும்

## செல்வம் எம். பி. கோரிக்கை

வவுனியா, மார்ச் 07

**பிரதமர் ஒருங்கிணைப்பு குழு சார்பில் அனைத்து மாவட்டங்களுக்கும் ஒவ்வொருவரை நியமிக்க வேண்டும். பிரதமரின் நடவடிக்கை எல்லா மாவட்டங்களிலும் நடைபெற வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக நாடுகளில் ஐ. நா. ஒன்றால்தான் எங்களின் இனப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின்போது எல்லா இனங்களையும் சமமாக கருத்தப்பட வேண்டும் என்ற ஐ. நாவின் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் - தட்டிக் கழிக்க முடியாது. இலங்கை அரசு தட்டிக் கழித்து வருவதால்தான் ஐ.நா முக்கியமான தீர்மானத்தை சொல்லியிருக்கிறது. இலங்கை அரசாங்கம் ஐ. நா தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்றால் நாங்கள் எல்லோரும் சோந்து ஐ. நா. முன் இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்த வேண்டி வரும்.

மேலும், யாழ்ப்பாணத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு சார்பாக கண்காணிப்பை மேற்கொள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சார்பில் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதே போல் எல்லா மாவட்டங்களிலும் ஒருவரை நியமிக்க வேண்டும். அப்போதுதான் செய்யப்படுகின்ற வேலைகள் ஒழுங்காக நடைபெறும். ஆகையால் பிரதமரின் நடவடிக்கை எல்லா மாவட்டங்களிலும் நடைபெற வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன் வைக்கின்றேன்- என்றார். (ஐ)



# மன்னாரில் தொடர்ந்தும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு!

மன்னார், மார்ச் 07

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக எரிபொருள் நிலையங்களில் டீசல் இன்மையால் தனியார் பேருந்து உரிமையாளர்கள், டிப்பர் சாரதிகள் உட்பட பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் கையிருப்பானது மிகவும் குறைவான நிலையில் காணப்படுகின்றது. பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லை. இதன் காரணமாக டிப்பர் வாகனங்கள் மற்றும் மீன் ஏற்றுமதி வாகனங்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட நேரம் வரிசையில் காணப்படுகின்றது.

டீசல்இன்மையால் தூர இடங்களுக்கு செல்லும் தனியார் பேருந்துகள், சாரதிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர். அதேநேரம் பல இடங்களில் டீசல் பதுக்கல் இடம்பெறுவதுடன் தொடர்ச்சியாக டீசல் பற் றாக்குறை நிலவும் என்பதால் வாகன உரிமையாளர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பரல், கலன்களுடனும் டீசலுக்கு காத்திருக்கின்றனர். (ஐ)

# கால்பந்தாட்ட வீரரின் உடலம் சனியன்று மன்னார் வந்தது!



மன்னார், மார்ச் 07

மாலைதீவில் கடந்த மாதம் 26ஆம் திகதி மரணமடைந்த இலங்கை தேசிய கால்பந்தாட்ட வீரர் டக்சன் பியூஸ்லஸின் பூதவுடல் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் மன்னார் பனங்கட்டுக் கொட்டில் உள்ள அவரின் இல்லத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இவரின் பூதவுடல், கடந்த 3ஆம் திகதி அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கை வந்தடைந்தது.

இந்த நிலையில் பூதவுடல் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில், பூதவுடல் அவரின் மனைவி மற்றும் குடும்பத்தினரிடம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைத்து கையளிக்கப்பட்டது.

மனைவியிடம் ஒப்படைக்கப்பட பூதவுடல் யாழ்ப்பாணத்துக்கு அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் பனங்கட்டுக் கொட்டில் உள்ள அன்னாரின் இல்லத்திற்கு எடுத்து வரப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் வரும் வழியில் பூநகரி, முழங்காவில், தேவன்பிட்டி, விடத்தல் தீவு, ஆண்டாங்குளம், அடம்பன் போன்ற இடங்களைச் சேர்ந்த கால்பந்தாட்ட கழக வீரர்கள் பல ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர். (ஐ)




# வவுனியாவில் மழலைகளுக்கான மாலை பாடசாலை திறப்பு விழா!

வவுனியா, மார்ச் 07

வவுனியா, தரணிக்குளத்தில் மழலைகளுக்கான மாலை நேர பாடசாலை நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா தரணிக்குளம் கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு உதவும்முகமாக மழலைகளுக்கான மாலை நேர பாடசாலையைப் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த மழலைகளுக்கான மாலை நேர பாடசாலையானது தரணிக்குளம் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# கடல் உணவுகளின் விலைகள் கிளிநொச்சியில் திடீர் உயர்வு

கிளிநொச்சி, மார்ச் 07

கிளிநொச்சி மாவட்டத்தில் கடல் உணவுகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன என்று நுகர்வோர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது நாட்டில் நிலவுகின்ற எரிபொருள் பற்றாக்குறை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக கடல் உணவுகளின் விலைகள் நேற்றுமுன்தினம் - நேற்றும் சடுதியாக அதிகரித்த நிலையில் காணப்பட்டது. குறிப்பாக கிளிநொச்சி பொதுச்சந்தை பகுதியில் பெரிய மீன் வகைகள் ஒரு கிலோ 800 ரூபாய் முதல் 1200 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

அத்துடன் இறால், கணவாய் ஆகியனவும் 1200 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்பட்டன.

இதேபோல சிறிய வகை மீன்கள் 600 தொடக்கம் 600 ரூபாய் வரைக்கும் விற்பனை செய்யப்பட்டதை அவதானிக்க முடிந்தது. கடல் உணவுகளின் விலை அதிகரிப்பால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# சர்வதேச மகளிர் தின நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது

கிளிநொச்சி, மார்ச் 07

வியர்வைதுளிகளின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் ஆரம்பமானது.

"பெண் தொழிலாளர்களை பாதுகாத்திடுங்கள், சி - 190 சமவாயத்தை ஏற்படுத்துங்கள்" எனும் தொனிப் பொருளில் இந்த வருட பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது.

இதன்போது, மேற்படி விடயங்களை வலியுறுத்தி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கப்பட்டதுடன், அவர்கள் ஊர்வலமாக பாரதி ஸ்ரார் தனியார் மண்டபம் வரை சென்றனர்.

தனியார் மண்டபத்தில் மண்டப நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் நாடளாவிய ரீதியில் உள்ள பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)





# போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோரை ஒடுக்க வேண்டும்!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

குருநாகல், மார்ச் 07

**எதிர்கால தலைமுறையை அழிக்கும் வகையில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோரை ஒடுக்க வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

குருநாகல் - நாரம்மல பிரதேச சபையின் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஒரு பக்கம் போர் தொடுத்தாலும் மறுபுறம் அரசு கட்டடங்கள், வீதிகள் போன்றவற்றை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டோம். அதற்கு இன்று பலன் கிடைத்துள்ளது என நம்புகிறேன். குறிப்பாக நெடுஞ்சாலைகள் அமைக்கும் பணி தொடங்கிய போது, நெடுஞ்சாலைகள் குறித்து பல விமர்சனங்கள் எழுந்தன. பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தன. அன்று குற்றஞ்சாட்டியவர்கள் இன்று அந்த வீதிகளில் பயணிக்கும்போதும் குற்றஞ்சாட்டுவதை நாம் அறிவோம்.

அப்போது குருநாகலை அடைய எத்தனை மணி நேரம் ஆனது? இன்று எவ்வளவு நேரம் செலவாகும்? அன்று காலை வேளையில் வரும்போது மெதமுலனவிலிருந்து கொழும்புக்கு வரும் வழியில் இடைநடுவில் உணவு அருந்திவிட்டே பயணிப்போம். அப்போது பழுதடைந்த வீதிகளே இருந்தன. ஆனால், ஒன்றரை அல்லது இரண்டு மணித்தியாலங்களில் கொழும்பு வந்து சேருகிறோம்.

இவ்வாறாக நாம் நாட்டின் அபிவிருத்தியை ஆரம்பித்தோம். போர் இடம்பெறும் போதே நாம் இதனை செய்தோம். நாம் எந்தவொரு அபிவிருத்தியையும் இடைநிறுத்தாமலேயே 30 ஆண்டுகால போரை முடிவுக்கு கொண்டு வர தீர்மானித்தோம். மக்களுக்கு வேண்டிய அனைத்தையும் பெற்றுக் கொடுத்து வேலை செய்வதுடனேயே நாம் போரையும் முடிவுக்கு கொண்டு வந்தோம். அதனால் தான் இன்று சுதந்திரமாக வந்து - சுதந்திரமாக பேசி - சுதந்திரமாக நடமாடி முடிகிறது.

இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது கருத்துக்களை தெளிவாக கூறி தனது நாட்டை ஒரு திசையில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். நாம் அனைவரும் பிரதமராக, அமைச்சர்களாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக மற்றும் அரச ஊழியர்களாக இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

நமது வருங்கால சந்ததியினரை பாதுகாக்க நாமும் உழைக்க வேண்டும். இன்று போதைப்பொருள் பிரச்னை தலைதூக்கியுள்ளது. நமது பிள்ளைகளை பாதுகாக்க போதைப் பொருள் வர்த்தகத்திற்கு எதிராக செயல்பட வேண்டும். அவ்வாறு செய்யாவிடின், நம் தேசத்தை அழிப்பதற்காக அவ்வாறான செயல்பாட்டை முன்னெடுப்போரை நாம் அடக்காவிட்டால், நம் பிள்ளைகள் பெரும் சிக்கலுக்கு ஆளாக நேரிடும்.



எனவே, போதைப்பொருளில் இருந்து மக்களைப் பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுப்போம். மேலும், நமது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும். தமது பிள்ளைகள் குறித்து சில பெற்றோர் அவர்களின் சிறுவயதில் அதிக கவனம் செலுத்துகின்ற போதிலும், அவர்கள் உயர் வகுப்புக்கு செல்லும்போது அவர்கள் மீதான கவனம் குறைந்துவிடுகிறது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அவர்களின்போக்கில் விட்டுவிட்டு தமது வேலையைத் தொடர்கிறார்கள்.

பிள்ளைகளை சிறு வயதை விட அவர்கள் பெரியவர்களாக வளரும்போதே அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, அவர்கள் இளைஞர்களாக வளர்ந்து நிற்கும்போது அவர்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது பெற்றோர், பெரியோரின் கடமையாகும். அவ்வாறு செய்யாவிடின் எதிர்காலத்தில் பெரும் பிரச்னைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும். எனவே நாம் எமது பிள்ளைகளை பாதுகாத்து தேசத்தை கட்டியெழுப்பி இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# முன்னாள் போராளிக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

கொழும்பு, மார்ச் 07

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் உறுப்பினர் என்று குற்றஞ்சாட்டப்படும் தங்கவேலு நிமலனுக்கு ஆயுள் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

சுமார் 2 கிலோ எடையுள்ள ஆர். டி. எக்ஸ் வெடிமருந்துகளை வைத்திருந்த குற்றத்துக்கு அவருக்கு இந்த தண்டனை விதிக்கப்பட்டது.

அவருக்கு எதிராக 2011ஆம் ஆண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இதேவேளை அவர் மீது மேலும் பல வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன. 2007 மே 28ஆம் திகதி இரத்மலானையில் சிறப்பு அதிரடிப் படையினர் பயணித்த ட்ரக் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தியமை,

2009 பெப்ரவரி 7ஆம் திகதியன்று குருநாகல் மாலிகாபிட்டி மைதானத்தில் தேர்தல் பேரணியின்போது மேடைக்கு அருகில் வெடிகுண்டு வெடித்து அப்போதைய ஜனாதிபதியை படுகொலை செய்ய முயற்சித்தமை, 2009 மார்ச் 13ஆம் திகதி அக்குரஸ்ஸ, கொடபிட்டியவில் தேவாலய விழா ஒன்றில் தற்கொலை குண்டுதாரி மூலம் அமைச்சர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் உள்பட 46 பேரை படுகொலை செய்யவும், அன்றைய ஜனாதிபதியை வெடிகுண்டு வீசி படுகொலை செய்ய முயற்சித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் விசாரணைகளில் உள்ளன. (ஐ)




# பயங்கரவாத சட்டத்தை நீக்க சகல இன மக்களும் ஆதரவு!

## நுவரெலியா போராட்டத்தில் சுமந்திரன்

நுவரெலியா, மார்ச் 07

"பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என அனைத்து இன மக்களும் வலியுறுத்தி வருகின்றனர். ஆதரவு தெரிவித்து கையொப்பம் இடுகின்றனர். எனவே, இந்தச் சட்டத்தை அரசு முற்றாக நீக்க வேண்டும்." - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நுவரெலியா நகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கையெழுத்து போராட்டம் நடத்தப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"பயங்கரவாத தடைச்சட்டமானது 40 ஆண்டுகாலமாக தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டு வந்தது. இடையிடையே சிங்கள இளைஞர்கள் தண்டிக்கப்பட்டனர். தற்போது முஸ்லிம் மக்களுக்கு எதிராக மிகமோசமாக இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், அதற்கு எதிராக போராடுபவர்களை ஒடுக்குவதற்கும் இந்தச் சட்டத்தை பயன்படுத்துவதற்கு அரசு தயாராகி வருகின்றது.

பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதே சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடாகும். இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் இதனையே வலியுறுத்துகின்றனர். எனவே, இது மக்கள் கோரிக்கையாகும். அதனை அரசு நிறைவேற்ற வேண்டும். நுவரெலியா மாவட்டத்தில் பெரும் ஆதரவு கிடைத்துள்ளது. " - என்றார்.



# பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக கண்டியிலும் கையொப்பங்கள்!

கண்டி, மார்ச் 07

பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக ஒழிக்க வேண்டும் எனக் கோரி கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை நேற்று முன்தினம் கண்டியிலும் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் கண்டி, ஜோர்ஜ் டி. சில்வா பூங்கா (டொறிங்டன்) முன்னால் இந்த நிகழ்வு நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், இரா. சாணக்கியன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மூவின மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தத்தமது கையெழுத்துக்களை பதிவிட்டனர். (ஐ)

# 12 வயதுக்கு உட்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்த நடவடிக்கை!

## கொழும்பு மருத்துவபீட பேராசிரியர்

கொழும்பு, மார்ச் 07

நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட மற்றும் விசேட தேவையுடைய 12 வயதுக்குட்பட்டோர் மற்றும் சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசி வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட பேராசிரியர் பூஜித விக்ரமசிங்க தெரிவித்தார். ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தடுப்பூசி வழங்கல் ஊடாக கோவிட் தொற்று ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு இதுவரையில் தடுப்பூசி வழங்கப்படவில்லை.

அவர்களை தொற்றிலிருந்து பாதுகாக்க வேண்டுமெனில் பெற்றோர், மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமானதாகும்.

அதேபோன்று 16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் அனைவரும் இரண்டாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதும் அத்தியாவசியமானதாகும். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் இலங்கையில் மிகக் குறைவாகும்.

எனவே தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை. 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் கோவிட்19 தொற்றுக்கு உள்ளானாலும் அவர்களுக்கு அறிகுறிகள் தென்படும் வீதம் மிகக் குறைவாகும். சில சந்தர்ப்பங்களில் அறிகுறிகளின்றியும் இருக்கலாம்.

எவ்வாறிருப்பினும் பாடசாலை ஆரம்பமானதன் பின்னர் இந்த நிலைமை மாற்றமடையலாம். எனவேதான் அவர்களுக்கு தடுப்பூசி வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது - என்றார். (ஐ)




# அமெரிக்காவின் அழுத்தத்தின் மத்தியிலும் ஐ.நா. வாக்கெடுப்பை தவிர்த்த இந்தியா!

## ஸ்டாலினை அணுகுவதற்கான கூட்டமைப்பினரின் முயற்சி...

மார்ச் நான்காம் திகதி ஐ.நா சபையின் மனித உரிமை பேரவையில் ஒரு தீர்மானத்தை எடுத்தது. "உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பால் சர்வதேச மனிதநேய சட்டங்கள் மீறப்பட்டிருக்கின்றன, மனித உரிமை மீறல், அச்சுறுத்தல்கள் அதிகரித்திருக்கின்றன. இதைக் கடுமையாகக் கண்டிக்கிறோம்" என்று அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

A/HRC/49/L.1 என்று அழைக்கப்படும் இந்தத் தீர்மானத்தில், ஒரு சர்வதேச விசாரணைக் குழு அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. "உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் செயல்பாடுகளில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் எல்லாவற்றையும் ஆராய்வதற்காக ஒரு சுதந்திரமான சர்வதேச விசாரணை குழு அமைக்கப்படும்" என்று அறிவித்ததோடு, ஐ.நா சபை மனித உரிமை சபை உறுப்பினர்கள் போரால் உயிரிழந்தவர்களுக்காக ஒரு நிமிடம் மௌன அஞ்சலியும் செலுத்தினார்கள்.


நாமும் உக்ரைன் போரால் உயிரிழந்தவர்களுக்காக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம். இரண்டு இந்திய மாணவர்களும் இதில் உயிரிழந்திருக்கிறார்கள். இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு உக்ரைனில் எதேனும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. படைக்கப்பட்டதிலிருந்தே மனிதன் இப்படித்தான் அக்கறையின்றி, கவலையின்றி கொலை செய்துவருகிறான். "ஐந்தறிவு உயிர்கள்" என்று நாம் அலட்சியப் படுத்தும் பிற உயிர்கள் இப்படி ரத்த ஆறு ஓடுவதற்குக் காரணமாகி, அறிவற்ற கொலைகளை நிகழ்த்துவதில்லை.

மனித உரிமை கவுன்சிலின் தீர்மானத்தைப் படித்தபிறகு, நீங்களும் அதை கவனித்தீர்களா என்று யோசித்தேன். சர்வதேச நட்புறவையும் பொது நியாயத்தையும் காற்றில் பறக்கவிட்டு ரஷ்யா மூர்க்கமாகத் தாக்கிவரும் உக்ரைனின் இடிந்த கட்டிடங்கள் மற்றும் புகைக்கு நடுவில் மட்டுமல்லாமல், எதையும் எதிர்த்தபடி தொடர்ந்து போர் நடத்தும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு ஒரு வலுவான எச்சரிக்கை போலவே தெரியும் இந்த தீர்மானத்தின் வரிகளுக்கு இடையிலும் நீங்கள் அதைப் பார்க்க முடியும். உன்னிப்பாக கவனித்தால் வெள்ளைத் தோலும் நீலக்கண்களும் அங்கே தெரிவதை கவனிக்கலாம்.

ஐ.நா அமைப்புகளின் சாரமற்ற பல செயல்பாடுகளைப் போலவே இந்தத் தீர்மானமும் இருக்கிறது. உலக அரசியலின் கவலையளிக்கும் நிலை இது. வெள்ளைத்தோலும் நீலக்கண்களும் கொண்ட பணக்கார, பலம் பொருந்திய நாடுகள், தங்களைப் போன்ற நாடுகளில் மனித உரிமை மீறலைப் பற்றிப் பேசும் போது வேறு ஒரு மொழியில் பேசுவார்கள். ஆனால் பழுப்பும் கறுப்புமாகத் தோல் நிறம் கொண்டவர்கள் இருக்கும் நாடுகளில் ரத்த ஆறு ஓடும்போது அலட்சியப்படுத்துவார்கள்.

"மூன்று மனித உரிமை வல்லுநர்கள் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை அமைப்போம். இவர்களை ஒரு வருட காலத்துக்கு மனித உரிமை கவுன்சிலின் அதிபர் நியமிப்பார். உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பின்போது மனித உரிமை மற்றும் சர்வதேச மனிதநேய சட்டம் ஆகியவை மீறப்பட்டிருப்பதாகவும், அவை சார்ந்த குற்றங்கள் நடப்பதாகவும் வந்திருக்கும் குற்றச்சாட்டுகளை இவர்கள் தீவிரமாக விசாரிப்பார்கள். அவ்வாறு குற்றங்கள் நடந்திருந்தால் அவை நடந்த சூழல், அதுபற்றிய தகவல்கள், அதற்கான ஆதார காரணங்கள் ஆகியவற்றை அலசிப்பார்த்து பரிந்துரைகளை சமர்ப்பிப்பார்கள். குறிப்பாக யார் இதற்குப் பொறுப்பேற்று என்ன செய்யவேண்டும் என்று கூறுவார்கள். தண்டனையின்றி தொடர்ந்து நிகழ்த்தப்படும் குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதும் குற்றங்களுக்குப் பொறுப் பேற்கச் செய்வதுமே இந்த விசாரணைக் குழுவின் நோக்கம்" என்று மனித உரிமை கவுன்சில் அறிவித்திருக்கிறது. "சுதந்திரமான சர்வதேச விசாரணை கமிஷன்" என்று அவர்கள் கூறியிருப்பது எனக்குப் பிடித்திருக்கிறது. கறுப்பு நிற ஆவணத்தில் அதை நீல நிறத்தில் குறிப்பிட்டும் காட்டியிருக்கிறார்கள்.

போர் சூழ்ந்த இடங்களில் நடக்கும் கொடூரம், அங்கு உள்ள வலி மற்றும் துக்கம் ஆகியற்றைப் பற்றி மனித உரிமைகள் கவுன்சில் திடீரென்று அக்கறை காட்டுகிறது என்று இதைப் புரிந்து கொள்வதா? ஈழப்போரின் முடிவில் டிசம்பர் 2008 முதல் மே 2009 வரை



- பகவான் சிங் -
தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்

நடந்த போர் குற்றங்களை விசாரிக்குமாறு பல ஆண்டுகளாகத் தொடர்ந்து ஈழத்தமிழர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார் களே, அந்த விசாரணை எப்போது தொடங்கும்?

ஐ.நா மற்றும் பிற உலக அமைப்புகளால் பழுப்பு மற்றும் கறுப்பு நிறத் தோல் கொண்டவர்கள் வேறுபாட்டுடன் நடத்தப்படுகிறார்கள் என்று குறைகூறிவிட்டால் போதுமா? அதே பழுப்பு கறுப்பு தோல் கொண்ட மகாத்மா காந்தி, மார்டின் லூதர் கிங் ஜூனியர், மால்கம் எக்ஸ் ஆகியோர் உலக அளவில் உரிமைப் போராளிகளாகக் கொண்டாடப்படுகிறார்கள் என்பதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமே.... சிலர் தன்னுடைய லட்சியத்துக்காக உயிரையே விட்டார்கள். சிலர் நீண்ட சிறைவாசம் அனுபவித்தார்கள். இன்னும் வரலாற்றுப் புத்தகங்களில் நம்பிக்கையின் தூதுவர்களாக அவர்கள் அங்கீகரிக்கப்படுவதற்குக் காரணம், அவர்கள் சுயநலத்துக்காக அன்றி தன்னுடைய மக்களுக்காகப் போராடினார்கள்.

மனித உரிமை பெரவையின் ஜெனிவா மாநாட்டில் சென்ற ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதியன்று எடுக்கப்பட்ட 46/1 தீர்மானத்தையும் நான் மறக்கவில்லை. இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிரான சர்வதேச விசாரணை பற்றிய அந்தத் தீர்மானத்தில், "இலங்கையில் நடந்த சர்வதேச போர்க்குற்றங்கள் பற்றிய ஆதாரங்களை சேகரித்து, ஆராய்ந்து அவற்றைப் பாதுகாத்து, எதிர்கால வழக்குகளில் பயன்படுத்துவதற்காக எடுத்து வைக்கவேண்டும்" என்று கூறப்பட்டிருந்தது. அது எந்த அளவுக்கு செயல்படுத்தப்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. இப்போது மீண்டும் இலங்கையின் பல அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஈழப்போரால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நீதி வழங்கவும் தமிழர்களுக்கு எதிரான அரசின் செயல்பாடுகள் மற்றும் எதிர்ப்புக்குரல்களை நசுக்கும் அரசின் வேலைகள் ஆகியவற்றுக்கான நீதியைக் கேட்டு மனித உரிமை கவுன்சிலை நாடியிருக்கிறார்கள்.

மனித உரிமை பேரவையிடமோ அல்லது மக்களுக்கெதிரான அரசுகளுடன் போராடிக்கொண்டிருக்கும் பிற உலக அமைப்புகளிடமோ, தெளிவான ஒரு கோரிக்கை அறிக்கையை ஒற்றுமை என்ற வலிமையுடன் முன்வைத்தால், வெற்றியடைவோம் என்று எதிர்பார்க்கலாம். இந்த அறிக்கையை உருவாக்க வேண்டுமானால் ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கலந்து ஆலோசித்து, கல்வியாளர்கள், பெண்கள் அமைப்புகள், இளைஞர்கள், பிற தொழில்முனைவோர் ஆகிய எல்லா சமூக அங்கத்தினரிடமிருந்தும் ஆலோசனைகளைப் பெற வேண்டும். இதில் புலம்பெயர்ந்தோரின் பங்களிப்பும் தேவை என்பதையும் மறந்துவிடக்கூடாது.

இப்போது நடந்துகொண்டிருக்கும் 49ஆவது மாநாட்டிலோ கடந்தகால கூட்டங்களிலோ இது செய்யப்படவில்லை என்பது கவலை தரும் செய்தி. எனதருமை ஈழநாடு நண்பர்களே, உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து நேர்மறையான தீர்வையும் தரக்கூடிய இதுபோன்ற ஒரு அறிக்கை இருந்தாலும் ஜெனிவாவில் அந்த ஒற்றுமையான தமிழ்க்குரல் கேட்காது என்று நான் சொன்னால், உங்களில் எத்தனை பேர் அதை ஏற்றுக்கொள்வீர்கள்?

மனித உரிமை பேரவை உட்பட ஐ.நாவின் அமைப்புகளில் வல்லரசு நாடுகளின் அதிகாரம் இருக்கிறது. வீட்டோ உரிமையின் மூலம், உலகின் பிற பகுதிகளுக்கு முக்கியம் என்றாலும் அவர்கள் எந்தத் தீர்மானத்தையும் நிராகரித்து விடுவார்கள். தனக்கு எதிரான உக்ரைன் போர் தீர்மானத்தில் ரஷ்யா வீட்டோ வாக்கை அளித்தது. தன்னுடைய வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி நட்பு நாடான பாகிஸ்தானை சீனா காப்பாற்றியது. இந்தியாவுக்கு எதிராக மனித உரிமை கவுன்சிலில் ஆறு முறை தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது மொஸ்கோ உதவி செய்ததற்காக, இந்தியா இந்தமுறை உக்ரைன் வாக்கெடுப்பில் பங்கெடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. மனித உரிமை அமைப்புகள் இந்தியாவின் இந்த செயல்பாட்டை கடுமையாக விமர்சிக்கின்றன, அமெரிக்காவின் அழுத்தமும் அதிகமாக இருந்தது. ஆனாலும் இந் தியா வாக்கெடுப்பில் பங்கெடுக்கவில்லை.

உண்மையிலேயே ஐ.நா. போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறவேண்டுமானால் இந்த வீட்டோ அதிகாரம் நீக்கப்பட வேண்டும் என்று உலகளாவிய அரசியல் மற்றும் நட்புறவு சார்ந்த வல்லுநர்களும் அமைப்புகளும் கூறிவருகின்றன. 1945ல் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு எத்தனை சிறிய நாடாக இருந்தாலும் உலகில் இருப்பவர்கள் அனைவருக்கும் ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக்க வேண்டும் என்ற உறுதியோடு ஐ.நா உருவாக்கப்பட்டது. நியூயார்க்கிலேயே தலைமையகத்தை வைத்துக்கொள்ளாமல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தலைமையகத்தை உலக நாடுகளின் நகரங்களுக்கு மாற்றிக்கொண்டேயிருந்தால் ஐ.நாவின் நிதி மற்றும் செயல்பாடுகளில் அமெரிக்காவின் ஆதிக்கம் குறையும் என்றும் சிலர் கூறுகிறார்கள்.

ஐ.நா யாழ்பாணத்துக்குத் தலைமையகத்தை நகர்த்துகிறது என்றே வைத்துக் கொள்வோம். ஆனாலும் புலம்பெயர் மற்றும் ஈழத்தமிழர்கள் ஒன்றுபட்டு ஒரு முழுமையான அறிக்கையைத் தராவிட்டால் அந்த ஐ.நாவிடம் நம்மால் எதையாவது கேட்டுப் பெற முடியுமா? தமிழ் மக்களுக்கு அமைதியும் முன்னேற்றமும் வேண்டும் என்பதற்காக மனித உரிமை கவுன்சிலில் ஆறு தமிழ் கட்சிகள் மனு அளித்திருக்கின்றன என்று படித்தபோது வியப்பாக இருந்தது. "தமிழ் மக்களுக்கு எதிரான வன்கொடுமை குற்றங்களைத் துடைப்பதற்குப் பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று கோரி ஆறு தமிழ்தேசிய கட்சிகள் கூட்டிணைந்து ஐ.நா மனித உரிமை ஆணையர்களுக்குக் கடிதம் அனுப்பி உள்ளனர்" என்று ஒரு செய்தித்தாளில் சொல்லப்பட்டது.

உக்ரைன் போரில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் மனித உரிமை பேரவையிடம் இப்போது இதை கேட்பது நடைமுறைக்கு ஒத்துவருமா என்று தெரியவில்லை. 2021இல் மனித உரிமை பேரவையில் நமக்கு அளித்த உறுதிமொழியை நிறைவேற்றவில்லை என்பதுபற்றி நாம் ஏன் பேசவில்லை? சரியான நேரத்தில் சரியான இடத்தில் நாம் குரல் எழுப்பி, அந்தக் குரலை ஒற்றுமையோடு முன்னிறுத்தாவிட்டால் எப்படி நம் மீது கவனம் விழும்? நம்முடைய பிரச்னைகளை பல தரப்பட்ட சக்திவாய்ந்த அமைப்புகளிடமும் நாம் கொண்டு செல்ல வேண்டும்.

சுமந்திரன் மற்றும் புவுகு அமைப்பைச் சேர்ந்த அவரது நண்பரான சுரேன் ஆகிய இருவரும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினைப் பாராட்டுரைகள் மூலம் கவர முயற்சி செய்தது பற்றி எல்லாரும் படித்திருப்போம். முதலமைச்சர் ஸ்டாலினை அணுகும் முயற்சியில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிற தலைவர்களை ஒதுக்குவது சரி என்று அந்த பாராளுமன்ற உறுப்பினர் நினைத்திருக்கிறார். சீனாவின் ஆக்கிரமிப்பைத் தடுக்க வேண்டுமானால் வடக்கு இலங்கையில் உள்ள தமிழர்களின் ஆதரவு இந்தியாவுக்குத் தேவை என்பதால் நாம் டில்லிக்குத் தொடர்ந்து அழுத்தம் தரவேண்டும். அதே சமயம், ஒரு ஒன்றுபட்ட தமிழ்க் குரலாக ஸ்டாலினிடம் பேசி, இந்தியாவை செயல்பட வைக்க உதவும்படியும் கேட்கவேண்டும். அதுவே சரியான அணுகுமுறையாக இருக்கும். தமிழ்நாட்டு மக்களுக்காக ஸ்டாலின் பல நல்ல திட்டங்களை முன்னெடுத்துவருகிறார். ஈழ அகதிகளுக்கும் பலவிதங்களில் உதவி செய்கிறார், தமிழ் மொழி, கலாச்சாரம், பாரம்பரியம் ஆகியவற்றை உலக அளவில் முன்னேற்றவும் தொடர்ந்து பல செயல்பாடுகளை மேற்கொள்கிறார். இந்த சூழ்நிலையில் ஈழத்தமிழர்களுக்கு அவர் சிறந்த ஒரு நியாயத் துரந்தரராக இருப்பார்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

## ரஷ்யா - உக்ரைன் போர்: 02

# இலங்கையைப் போன்ற பெருந் தேசியவாதமும் நாக்ஸிசமும்

**வி. சிவலிங்கம்**

இலங்கையில் எவ்வளவு சிங்கள-தமிழ் உறவு மோசமாக உள்ளதோ, அதேபோலவே உக்ரெயின் நாட்டிலும் ரஷ்ய மொழி பேசும் மக்களுக்கும், உக்ரெயின் மொழி பேசும் மக்களுக்குமிடையே பிரச்னைகள் தொடர்ந்து காணப்பட்டன. அதேபோலவே, இலங்கையில் சிங்கள - தமிழ் உறவுகள் மோசமடைந்து மோதலாக மாற்றமடைந்த வேளையில் சர்வதேச தலையீடுகள் அதிகரித்ததோ, எவ்வாறு இலங்கையில் சிங்கள பெருந் தேசியவாதம் பெரும்பான்மை வாதத்தைப் பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றியதோ, அதேபோலவே உக்ரேனிய தேசியவாதம் உக்ரெயினிலும் உக்கிரப்படுத்தி உள்நாட்டு மோதல்களை அதிகரிக்க உதவியது.

சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒடுக்க, தேசிய அளவில் அம் மக்களின் அடையாளங்களை ஒழிக்க தனிச் சிங்கள சட்டம், ஒரு நாடு, ஒரு சட்டம், தொல்பொருள் பாதுகாப்பு என பல வழிகளில் முயற்சிக்கிறதோ அவ்வாறான செயல்கள் அங்கும் நிகழ்ந்தன. இந்த வரலாற்றினை அறிவதன் மூலம் பல பாடங்களை நாம் கற்க முடியும். உதாரணமாக, ஜெனீவா மனித உரிமைச் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் சில முயற்சிகள் எடுக்கப்பட்ட வேளையில் ரஷ்யா, உக்ரெயின் போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டன. இன்று, இப்போரில் இலங்கை நடுவுநிலை வகிக்கப் போவதாக அறிவித்துள்ளது. இந்த நிலையை இலங்கையால் தொடர்ந்து வைத்திருக்க முடியுமா?

ஐரோப்பாவில் மூன்றாம் உலகப் போர் தோற்றுவதற்கான ஆரம்ப அறிகுறிகள் தென்படுகின்றன. ரஷ்ய ஜனாதிபதி தனது அணு ஆயுதப்படைகளை உசார் நிலையில் வைத்திருக்குமாறு உத்தரவிட்டுள்ளார். ஏனெனில், அமெரிக்கா மற்றும் சில நாடுகள் உக்ரெயினிடம் அவ்வாறான ஆயுதங்களைக் கையளித்துள்ளதாகத் தெரியவருகிறது. உக்ரெயினில் நான்கு அணு உலைகள் செயற்படுவதாகத் தெரியவருகிறது. எனவே, போர் விஸ்தரித்துச் செல்வதற்கான நிலமைகள் காணப்படுகின்றன. அது மட்டுமல்ல, ரஷ்ய தாக்குதல்கள் போலந்து, ரூமேனியா போன்ற எல்லை நாடுகளுக்குள் சென்றால் அதனைச் சாக்காக வைத்து ரஷ்யாவைத் தாக்குவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் கருதப்படுகிறது. ஏற்கெனவே பல லட்சம் உக்ரேனியர்கள் போலந்து, ரூமேனியா ஆகிய நாடுகளுக்குள் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். எனவே, அணு ஆயுதப் போர் தவிர்க்க முடியாமல் ஏற்படலாம் என்ற சந்தேகங்கள் பலமாகவே உள்ளன.

தற்போது நடைபெற்று வரும் ரஷ்ய - உக்ரைன் போர் தற்செயலானது அல்ல. கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக உள்நாட்டில் இடம்பெற்றுவரும் நாஸிச நோக்கிலான தேசியவாதம் மிகவும் உக்கிரமாக செயற்பட்டு வந்தது. உக்ரைன் நாடு சோவியத் குடியரசிலிருந்து பிரிந்து தனியான நாடாக செயற்பட்டுவருகிறது. அதுபோலவே போலந்து, கங்கேரி, ரூமேனியா போன்ற முன்னாள் சோவியத் குடியரசு நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராகச் செயற்படுவதோடு, ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்து வருகின்றன. உதாரணமாக, கடந்த காலங்களில் பிரித்தானியா உட்பட ஐரோப்பிய நாடுகள் பல ஆசிய, ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள் பலவற்றை தமது குடியேற்ற நாடுகளாகக் கட்டுப்படுத்தி வைத்திருந்தன. 1917ஆம் ஆண்டு ரஷ்யாவில் ஏற்பட்ட தொழிலாளர் புரட்சியும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இரண்டாவது உலகப் போரும் ஏகாதிபத்தியங்களின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி, சுதந்திர நாடுகளாக அவை மாற்றமடைய உதவின. இந்த நாடுகள் தம்மை ஒடுக்கி வைத்திருந்த குடியேற்ற ஆதிக்க நாடுகளின் கொடுமைகளை, பொருளாதாரச் சுரண்டல்களை இன்னமும் மறக்கத் தயாரில்லை. அதுபோலவே சோவியத் குடியரசில் இணைந்திருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவை தமது குடியேற்ற ஆதிக்க நாடாகவே வர்ணிக்கின்றன. இதற்குப் பல காரணங்கள் காணப்பட்டபோதிலும், சோவியத் குடியரசின் வீழ்ச்சியும், அதன் சோசலிச நிர்மாணத் தோல்விகளும் புதிதாக விடுதலையடைந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளை முதலாளித்துவத்தை நோக்கித் தள்ளின.

கடந்த காலங்களில் உலக விவகாரங்கள் அமெரிக்க - சோவியத் என்ற இரண்டு வல்லரசுகளின் போட்டிக் களங்களாக மாறியிருந்தன. 90களில் ஏற்பட்ட சோவியத் ரஷ்யாவின் கம்யூ. கட்டுமானத் தோல்விகள் காலப்போக்கில் அமெரிக்கா மட்டுமே உலகின் போக்கைத் தீர்மானிக்கும் 'தனிக்காட்டு ராஜா' என்ற நிலைக்குத் தள்ளியிருந்தன. இரண்டாம் உலகப் போரில் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் அமெரிக்கா போரை நடத்த உதவியது மட்டுமல்லாமல், அப் போரின் பின்னர் ஐரோப்பாவின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப அமெரிக்க முதலீடுகள் உதவின. இதனால் அமெரிக்காவின் பொருளாதாரம் மிகவும் வளர்ந்தது. அதுமட்டுமல்லாமல், பலமான இராணுவத்தைக் கட்டியிருந்த அமெரிக்கா, ஐரோப்பாவில் மீண்டும் ஒரு போர் வராமல் தடுத்தல் என்ற யோசனையின் அடிப்படையில் தனது இராணுவத்தின் தலைமையில் 'நேட்டோ' என்ற இராணுவக் கட்டமைப்பை ஐரோப்பிய நாடுகளின் உதவியுடன் உருவாக்கியது.

சோவியத் சோசலிசக் குடியரசின் வீழ்ச்சிக்குப் பின்னர், குறிப்பாக பிளவுபட்ட ஜேர்மனி இரண்டும் ஒன்றாக்கப்பட்ட வேளையில், நேட்டோ தரப்பினர் சோவியத் குடியரசிலிருந்து விலகிய நாடுகளை நேட்டோ இராணுவக் கூட்டில் இணைப்பதில்லை என வாக்குறுதி அளித்திருந்தனர். காலப் போக்கில் அமெரிக்க வல்லரசு ஆதிக்கம் ஒற்றை ஆதிக்கமாக உலகம் முழுவதிலும் வியாபித்த வேளையில் ஐரோப்பிய நாடுகளில் சில நேட்டோ இராணுவக் கூட்டில் இணைந்தன. கொடுத்த வாக்குறுதிகளை மீறி நேட்டோ இராணுவம் ரஷ்யக் குடியரசின் அண்மித்த நாடுகளை நோக்கியும் தனது வலையை விரித்தது. இதன் விழைவுதான் இப் போராகும். ஆனாலும் உக்ரெயின் நாட்டில், உக்ரெயின் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதும், நேட்டோ இராணுவக் கூட்டில் இணைவது என்பதும் மிகுந்த விவாதப் பொருளாக அமைந்தது. அரசியல் கட்சிகள் மிகவும் பிளவுபட்டிருந்தன. இப் பிளவுகள் புதிய வடிவத்தைக் கொண்டிருந்தன.

**போலித் தேசியவாதமும், நாக்ஸிசமும்**

இலங்கை அரசியலை இந்த நிகழ்வோடு ஒப்பிடுகையில், 1970களின் பின்னர் இலங்கை அரசியலைத் தனிக் கட்சி தீர்மானிக்க முடியாத அளவிற்கு அரசியல் போக்குகள் மாறியிருந்தன. கூட்டு அரசாங்கங்களே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றின. இதனால் சிறிய அரசியல் கட்சிகளும் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் வலுவைப் பெற்றிருந்தன. இதனால் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் தமது நிகழ்ச்சி நிரல்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலை காணப்பட்டது. இலங்கையைப் பௌத்த சிங்கள நாடாக மாற்றும் முயற்சிகளுக்கும், நாட்டின் ஏனைய சிறுபான்மைத் தேசிய இனங்களின் ஜனநாயக உரிமைகளை ஒடுக்குவதற்குமான திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் முதலாளித்துவ சிங்கள அரசியல் தலைமைகள் திறந்த பொருளாதாரக் கோட்பாடுகளை முன்வைத்து, நாட்டைச் சிங்கப்பூராக மாற்றுவதாக புதிய நியாயங்களைக் கற்பித்தன.

ஏற்கெனவே வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஜனநாயக உரிமைக்கான போராட்டங்கள் இராணுவ ஒடுக்குமுறைக்குள் தள்ளப்பட்ட நிலையில், அதற்கு எதிரான வன்முறைப் போராட்டங்கள் படிப்படியாக வலுப்பெற்று வந்தன. அதேபோலவே, சுதந்திரத்திற்குப் பின்னதான அரசுகள் காத்திரமான பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தத் தவறியதால் தெற்கில் ஆட்சிக்கு எதிரான இளைஞர் போராட்டங்கள் ஆயுத வன்முறையாக மாறியிருந்தன. இவை அரசுக்கு எதிரான போராட்டங்களாகக் காணப்பட்டபோதிலும் உள்ளடக்கத்தில் ஒருபுறத்தில் சிங்கள பௌத்த தேசியவாதமாகவும், மறு புறத்தில் தமிழ்க் குறும் தேசியவாதமாகவும் மாற்றமடைந்து சென்றன. இத் தேசியவாதங்கள் ஒன்றுக்கு ஒன்று எதிர்நிலையை நோக்கிச் சென்றன. சிங்கள பௌத்த பெருந்தேசியவாத சக்திகள் நாட்டின் சிறுபான்மைத் தேசிய இனங்களை, குறிப்பாக தமிழ் மக்களை எதிரி நிலைக்குத் தள்ளின. அதேபோலவே தமிழ்க் குறும் தேசியவாதம் ஒட்டுமொத்த சிங்கள மக்களையும் தனது எதிரியாக சித்தரிக்கும் அரசியலை நோக்கிச் சென்றது. சிங்கள பெருந்தேசியவாதம் நாட்டின் இதர சிறுபான்மைத் தேசிய இனங்களது ஜனநாயக உரிமைகளை நிராகரித்து, இலங்கை என்பது சிங்கள பௌத்த நாடு எனவும், தனிச் சிங்கள வாக்குகளால் நாட்டின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்க முடியும் என்ற நாக்ஸிசவாதத்துடனும் முன்னெடுக்கப்பட்டது. இதன் பின்னால், சிங்கள பௌத்த இராணுவம் பக்கபலமாகச் செயற்பட்டது.

இதுவே உக்ரெயினிலும் நடைபெற்றது. எவ்வாறு சிங்களப் பெருந்தேசியவாதம் தனது இலக்குகளை அடைய சிங்கள பௌத்த அடையாளங்களை முன்னிலைப்படுத்தியதோ அதே போலவே உக்ரேனியர்கள் நாட்டில் வாழும் 30 சதவீத ரஷ்ய மொழி பேசும் மக்கள் தமது அடையாளத்திற்குத் தடையாக இருப்பதாகப் போலித் தேசியவாதத்தை முன்னெடுத்தார்கள். தமது இப் போலித் தேசியவாத நடவடிக்கைகளுக்கு ரஷ்யா தடையாக இருப்பதாக பிரச்சாரம் செய்தார்கள். எவ்வாறு இலங்கைத் தமிழ் மக்களின் பின்னணியில் இந்தியா செயற்படுவதாகக் கூறி சிங்களப் பகுதிகளில் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரங்கள் நடத்தப்படுகின்றனவோ அவ்வாறே ரஷ்ய எதிர்ப்புப் பிரச்சாரங்களும் இடம்பெற்றன.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஐ.நா சபையில் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ரஷ்யா உடனடியாகத் தனது படைகளை உக்ரெயினிலிருந்து விலக்க வெண்டுமெனக் கோரும் தீர்மானத்திற்கு ஆதரவாக 141 நாடுகளும், 5 நாடுகள் எதிராகவும் வாக்களித்ததுடன் 35 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமலும் தவிர்த்துக்கொண்டன. ஐ. நா. சபைத் தீர்மானங்கள் பல இஸ்ரேல் நாடு பாலஸ்தீனர்களுக்கு எதிராக நடத்தும் கொடுமைகளுக்கு எதிராக இவ்வாறான பல நாடுகள் இணைந்து வாக்களித்த போதிலும் இன்றுவரை பிரச்னைகள் தீரவில்லை. அதுபோலவே உலக நாடு கள் பல அமெரிக்காவோடு இணைந்து வாக்களித்த போதிலும் மாற்றங்கள் ஏற்படுமா? என்பது சந்தேகமே. இங்கு இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், ரஷ்யா படைகளை உக்ரெயினிலிருந்து விலக்கவேண்டுமெனக் கோரும் தீர்மானத்தை சிறிய நாடுகளான பூட்டான், நேபாளம், மாலைதீவு போன்ற நாடுகள் ஆதரித்து வாக்களித்த நிலையில் இலங்கை வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் தவிர்த்துக்கொண்டமை அதன் குழப்ப நிலையை எடுத்துக் காட்டுகிறது.

தற்போது மிகவும் அச்சமூட்டும் வகையில் போர் நிலமைகள் மாறிவரும் நிலையில் சோவியத் குடியரசிலிருந்து விலகிய சகோதர நாடு தமது மூத்த சகோதரரின் தாக்குதலுக்கு முகம் கொடுத்திருப்பது பல குழப்ப நிலமைகளை ஏற்படுத்தியுள்ளது. உக்ரெயின் நாட்டிலுள்ள தேசியவாதிகளல்லாத அமைதியை விரும்பும் மக்கள் இந்த நிலமைகள் குறித்து மிகவும் கவலையடைந்துள்ளனர். உதாரணமாக, சிங்கள மக்களும், தமிழ் மக்களும் இணைந்து வாழ்வதை விரும்பும் பல சிங்கள தேசபக்த சக்திகள் 30 ஆண்டுகாலப் போரின்போது எதுவுமே பேசமுடியாத நிலையிலிருந்தனர். ஏனெனில், சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் அவ்வாறான கருத்துக்களுக்கு இடமளிக்காதது மட்டுமல்ல, அவர்களை தமக்கு மத்தியில் வாழும் எதிரிகளாகவும் பட்டம் சூட்டினர். உக்ரெயினிலுள்ள அமைதியையும், சமாதானத்தையும் விரும்பும் மக்கள் நிலையும் இவ்வாறே உள்ளது.

**மக்கள் புரட்சியா? கூட்டுச் சதியா?**

இலங்கையில் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைப் போராட்டங்கள் எவ்வாறு பயங்கரவாதம் என வர்ணிக்கப்பட்டதோ அதேபோன்றே உக்ரெயின் தென் பிராந்தியங்களில் வாழும் ரஷ்ய மக்களின் போராட்டங்களும் வர்ணிக்கப்பட்டன - ஒடுக்கப்பட்டன. தற்போது உக்ரெயின் நாடு ரஷ்யாவுக்கு எதிராக போராடும் நிலையை ஒரு சாரார் மக்கள் புரட்சி என வர்ணிக்கிறார்கள். குறிப்பாக, மேற்கு நாடுகள் உக்ரெயின் மக்கள் தமது சுதந்திரத்திற்காகப் போராடுவதாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் இன்னொரு சாரார், மேற்குலக நாடுகளின் சதி வலைக்குள் குறிப்பாக, நேட்டோ இராணுவ விஸ்தரிப்புப் பொறிக்குள் உக்ரெயின் அகப்பட்டுள்ளதாகவும் இது, மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கூட்டுச் சதியெனவும் குறிப்பிடப்படுகிறது. **(தொடரும்)**

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

6. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.
   (i) அறம்செய விரும்பு என்றார் ஔவைப் பாட்டி
   (ii) போட்டியில் முதலிடம் பெற்றவர் யார்


7. பின்வரும் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான பழமொழிகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
   (i) விடாமுயர்சியாற் பயன் உண்டு
   ..............................................................................................
   (ii) கோபம் சிந்தனைக்கு இடையூறு
   ..............................................................................................

8. பின்வரும் வாக்கியத்தை இறந்த காலத்தில் எழுதுக.
   பறவைகள் கூடு நோக்கிப் பறக்கின்றன.
   ..............................................................................................

9. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.
   இடம் + பற்றாக்குறை = ..................................................

10. பின்வருவனவற்றின் உள்ளீட்டு மரபுப் பெயர்களை எழுதுக.
   (i) நெல் : ..........................................
   (ii) கற்றானை : ..........................................

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
   (i) Flowers : ..........................................
   (ii) Eyes : ..........................................

12. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.
   (i) 
   ..................................................
   (ii) 
   ..................................................

13. தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.
   (i) am / very / I / happy : ..............................................................
   (ii) like / play / I / cricket / to : ..............................................................

14. 'யெஹறலிய' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.
   : ..............................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.
   பால் குடியுங்கள் : ..............................................................

16. 'ஆறாயிரத்து இருபத்து மூன்று' எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.
   : ..............................................................

17. 16999 இலும் 2 கூடிய எண் யாது?
   : ..............................................................

18. 7450 எனும் எண்ணில் இலக்கம் 4 இனால் குறிக்கப்படும் பெறுமானம் யாது?
   : ..............................................................

19. 10*l* நீரைக் கொள்ளக்கூடிய ஒரு பாத்திரத்தில் 3*l* 750*ml* நீர் உள்ளது. பாத்திரத்தை முற்றாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீரை ஊற்ற வேண்டும்?
   : ..............................*l* ..............................*ml*

20. அரிசிப்பொதி ஒன்றின் நிறை 3kg 900g ஆகும். இன்னொரு அரிசிப்பொதியின் நிறை 2kg 750g ஆகும். அரிசிப்பொதிகளின் மொத்த நிறை யாது?
   : ..............................kg ..............................g

## விடைகள்

6. (i) "அறம்செய விரும்பு" என்றார் ஔவைப் பாட்டி.
   (ii) போட்டியில் முதலிடம் பெற்றவர் யார்?
7. (i) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
   (ii) ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு
8. பறவைகள் கூடு நோக்கிப் பறந்தன.
9. இடப்பற்றாக்குறை
10. (i) அரிசி
   (ii) சோறு
11. (i) பூக்கள்
   (ii) கண்கள்
12. (i) Umbrella / UMBRELLA / umbrella
   (ii) Elephant / ELEPHANT / elephant
13. (i) I am very happy
   (ii) I like to play cricket
14. நண்பி
15. கிரி பொன்ன
16. 6023
17. 17001
18. 400
19. 6, 250
20. 6, 650

## கல்வி tv CHANNEL-1

**07.03.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல்<br>மறு ஒளிபரப்பு<br>அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**07.03.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# "எனக்குள்ளே" இசை வெளியீட்டில் கண் தானம் செய்தது படக்குழு!

மட்டக்களப்பு, மார்ச் 07

எனக்குள்ளே திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் படக்குழுவினர் கண் தானம் செய்தனர்.

மட்டக்களப்பு வர்த்தக சினிமா துறையில் பெரும் சாதனை படைத்த "சிப்ஸ் சினிமாஸ்" தயாரிப்பு நிறுவனம் எனக்குள்ளே திரைப்படத்தை வரும் 19ஆம் திகதி வெளியிடுகின்றது. இந்தத் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு வில்லியம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக் கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பாரதி கெனடி கலந்து கொண்டார். அத்துடன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசாரப்பிரிவின் பீடாதிபதி கலாநிதி ஜே. கெனடி, கிழக்கு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கந்தசாமி அருளானந்தம், மட்டக்களப்பு தமிழ் சங்கத்தின் தலைவர் சைவப்புரவலர் வீ. ரஞ்சிதமூர்த்தி, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையின் பிரதி சுகாதார பணிப்பாளர் மருத்துவர் என். மயூரன், மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி.வளர்மதி ராஜ், சமூக பற்றாளர் சோமசூரியம் திருமாறன், மகுடம் இதழ் ஆசிரியர் மைக்கல் கொலின் கலந்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து தயாரிப்பு நிறுவன பணிப்பாளரும் மருத்துவமருமான கு. சுகுணன், தயாரிப்பாளர்களான முரளீதரன், கோடீஸ்வரன் மற்றும் இசை அமைப்பாளர் கேசாந்த் குலேந்திரன் இசைத் தட்டை வெளியிட்டனர். இதன்போது கேஷாந்த் குலேந்திரனின் இசையமைப் பில் உருவான மூன்று பாடல்கள் வெளியிடப்பட்டன. இதன் தொடர்ச்சியாக படக் குழுவினர் தமது கண்களை தானம் செய்தனர்.

# தொற்றால் இறந்தோரின் சடலங்கள் நல்லடக்கம் ஓட்டமாவடியில் நிறைவு

ஓட்டமாவடி, மார்ச்

**ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட மஜ்மா நகரப் பகுதியில் கோவிட்-19 ஜனஸா நல்லடக்க பணி ஒரு வருட பூர்த்தியாகியுள்ள நிலையில் விசேட ஒன்றுகூடலும், விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.**

ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ. எம். நௌபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எம். எஸ். எம். தாரிக், ஓட்டமாவடி வர்த்தக சங்க தலைவர் எம். ஏ. சி. நியாஸ், பிரதேச சபை உறுப்பினர்கள், இராணுவத்தினர், பிரதேச சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கோவிட் - 19 மையவாடிக்கருகில் கோவிட்-19 தொற்றினால் மரணித்தவர்களுக்காக விசேட துஆப் பிரார்த்தனை நிகழ்வுகள் இடம்பெற்றன.

அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு அமைய கோவிட்-19 தொற்றால் மரணிக்கின்றவர்களின் உடல்களை ஓட்டமாவடி மஜ்மாநகரில் நல்லடக்கம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் திகதி கோவிட்-19 தொற்றால் மரணித்தவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்வதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியிருந்தது.



இதற்கமைவாக ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட மஜ்மாநகர் பகுதியில் பிரதேச சபை, சுகாதார திணைக்களத்தினர், இராணுவத்தினர் ஆகியோரால் உடல்களை அடக்கம் செய்யும் பணியானது ஆரம்பித்து வைக்கப்பட்டு இன்று வரைக்கும் இராணுவத்தினர், சுகாதாரத் தரப்பினரின் முழுமையான ஒத்துழைப்புடன் ஓட்டமாவடி பிரதேச சபையினால் நல்லடக்கம் செய்வதற்கு விரும்புகின்ற அனைத்தின மக்களின் உடல்களும் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

05.03.2021 தொடக்கம் 05.03.2022 வரை கோவிட்-19 தொற்றால் மரணித்த 3,634 நபர்களின் உடல்கள் இந்த மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. கோவிட் - 19 தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை இனி தமது பிரதேசங்களிலேயே அடக்கம் செய்யலாம் என்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக ஓட்டமாவடியில் கோவிட் - 19 தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்கள் ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்படாது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பிரதி பிரதம செயலருக்கு சாய்ந்தமருதில் பாராட்டு

சாய்ந்தமருது, மார்ச் 07

கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளராக (நிர்வாகம்) நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட நிர்வாக அதிகாரி ஏ. மன்சூரை பாராட்டி கௌரவிக்கும் விழா சாய்ந்தமருது போரத்தின் ஏற்பாட்டில் அல்-ஹிலால் வித்தியாலய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தருமான எம். எம். உதுமாலெவ்வை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே. எம். ஏ. டக்ளஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பிரதிப் பிரதம செயலாளராக பதவி உயர்வுபெற்ற ஏ.மன்சூர் 31 வருட நிருவாக சேவையையும், சாய்ந்தமருது உப பிரதேச செயலகத்தை பிரதேச செயலக தரத்துக்கு தரமுயர்த்த பாடுபட்ட அவரின் சேவையை நினைவுகூர்ந்து சாய்ந்தமருது போரம், சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தகர்கள் சங்கம், சிலோன் மீடியா போரம், அல்-அமானா நற்பணி மன்றம் ஆகிய அமைப்புக்களினால் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம், நினைவுப் பரிசு என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டது. (ஐ)

# சுகாதார தகவல்கள் கணனி மயப்படுத்தல்!

சம்மாந்துறை, மார்ச் 07

சுகாதார தகவல்களை கணனி மயப்படுத்தலும் முகாமைத்துவம் செய்தலும் வேலைத் திட்டம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் அஸாத் எம். ஹனிபா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதில், சுகாதார தகவல்கள் பணிப்பாளர் மருத்துவர் பாலித கருணபேம பங்கேற்று ஆரம்பித்து வைத்தார்.

வைத்தியசாலை நோயாளிகளை பார்வையிடல், மருந்து விநியோகம், இரத்தப் பரிசோதனைகள், கதிரியக்கப் பரிசோதனைகள் என அனைத்து தகவல்களையும் கணனி மயப்படுத்தப்பட்டு மிகக்குறுகிய நேரத்துக்குள் சேவை வழங்குவதே இதன் நோக்கமாகும் என மருத்துவ அத்தியட்சகர் அஸாத் எம். ஹனிபா தெரிவித்தார்

நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ. ஆர். எம். தௌபீக், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவன தலைவர் எம். ஆர். ஒஸ்கட சேனநாயக்க, விசேட மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள்,வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# காத்தான்குடி மருத்துவமனைக்கு 6 ஒட்சிசன் கருவிகள் அன்பளிப்பு

காத்தான்குடி, மார்ச் 07

காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண அன்பளிப்புச் செய்த ஒட்சிசன் கருவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அப்துல் ஜவாத் ஆலீம் வலியுல்லாஹ் நம்பிக்கை பொறுப்பு நிறுவனத்தின் தலைமை நிர்வாக பொறுப்பாளரும் காத்தான்குடி நகர சபை பிரதி தவிசாளருமான எம். ஐ. எம். ஜெஸீம், அதன் செயலாளர் மௌலவி கே. ஆர். எம். சஹ்லான் ரப்பாணி அப்துல் ஜவாத் ஆலீம் வலியுல்லாஹ் நம்பிக்கை பொறுப்பு நிறுவனத்தின் பிரதிநிதிகள் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் எம். எஸ். ஜாபீரிடம் இந்த ஒட்சிசன் கருவிகளை கையளித்தனர்.

இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமணவிடம் அப்துல் ஜவாத் ஆலீம் வலியுல்லாஹ் நம்பிக்கை பொறுப்பு நிறுவனத்தின் தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி ஏ. ஜே. அப்துர் ரஊப் மிஸ்பாஹி விடுத்த வேண்டுகோளின் பேரில்காத்தான்குடி ஆதார வைத்திய சாலைக்கு இரண்டு மில்லியன் ரூபாய் பெறுமதியான ஆறு ஒட்சிசன் கருவிகள் வழங்கப்பட்டன. (ஐ)

# மருதமுனையில் காஸ் அடுப்பு வெடிப்பு

அக்கரைப்பற்று, மார்ச் 07

அம்பாறை - மருதமுனை பிரதேசத்தில் வீடு ஒன்றில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளது.

மருதமுனை - பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இமாம் கஸ்ஸாலி வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் சமையல் பணிகள் முன்னெடுக்கப்பட்டு கொண்டிருந்த போதே, எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

இதனால், சமையலில் ஈடுபட்டிருந்த நபருக்கோ அல்லது வேறு எவருக்கும் எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை.

சம்பவம் குறித்து வீட்டு உரிமையாளர் இவ்வாறு தனது கருத்துக்களை வெளியிட்டார். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பெரிய நீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# 11 ஆயிரம் ரஷ்ய படையினர் போரில் கொல்லப்பட்டனர்!

## உக்ரைன் அரசு தெரிவிப்பு



கீவ், மார்ச் 07

உக்ரைன் மீதான யுத்தத்தை ரஷ்யா ஆரம்பித்தது முதல் இது வரை 11,000 க்கும் மேற்பட்ட ரஷ்ய துருப்புக்கள் கொல்லப்பட்டதாக உக்ரேன் இன்று ஞாயிற்றுக்கிழமை அறிவித்துள்ளது.

நேற்று முன் தினம் 10,000 ரஷ்ய துருப்புக்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நிலையில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட 11 ஆவது நாளான நேற்று 11,000 பேர் கொல்லப்பட்டுள்ளதாக உக்ரேனிய ஆயுதப்படைகளின் ஜெனரல் கூறியுள்ளார்.

எனினும் தனது படைகளின் உயிரிழப்புகள் குறித்த தக வல்களை உக்ரைன் வெளி யிடவில்லை.

இதேவேளை, போர் தொடங்கியதில் இருந்து ரஷ்ய படைகள் 88 விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களை இழந்துள்ளதாக உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. அத்துடன், பல ரஷ்ய விமானிகள் உயிருடன் பிடிபட்டுள்ளனர் எனவும் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

இதற்கிடையே உக்ரைன் தலைநகர் கீவ் வடமேற்கே இர்பான் என்ற நகரத்தில், ஹோஸ்டோமெல் விமானதளத்துக்கு அருகே நேற்றும் கடுமையான சண்டை நடந்தது.

பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடுவதற்காக நடந்தே அந்தப் பகுதியை விட்டு வெளியேறி வருகின்றனர்.

உக்ரைன் கிழக்கில் கார்ஹிவ் மற்றும் சுமி நகரங்கள் மீது ரஷ்யப் படைகள் தொடர்ந்து குண்டுவீச்சு தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

டொன்பாஸ் பகுதியில் பல சிறுநகரங்கள் மற்றும் கிராமங்களைக் கைப்பற்றியவாறு 7 கிலோ மீட்டருக்கு முன்னேறியுள்ளதாக ரஷ்யா கூறியுள்ளது. (அ)

# உக்ரைனியர்களுக்கு மிக விரைவாக வதிவிட அனுமதி! டென்மார்க் முடிவு!

## உடனடியாக விசேட சட்டம் வருகிறது



கொப்பன்கேஹன், மார்ச் 07

உக்ரைனில் இருந்து வரும் வேறு நாட்டவர்கள் இதில் உள்ளடங்கார் டென்மார்க் அங்கு வரும் உக்ரைன் அகதிகளை ஏனைய நாடுகளது அகதிகளைக் கையாள்வது போலன்றி விசேடமாக- புறம்பாக - சிறப்புச் சலுகைகள் வழங்கிக் கவனிக்கவுள்ளது. உக்ரைன் நாட்டவர்களுக்காக அதன் குடியேற்றவாசிகள் தொடர்பான இறுக்கமான கொள்கைகளைக் கைவிட்டு மிக விரைவிலேயே விசேட சட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டுவரவுள்ளது. அச்சட்டம் அங்கு தங்கியுள்ள ஏனைய வெளிநாட்டு அகதிகளுக்குப் பொருந்தாது. உக்ரைனியர்கள் மிக குறுகிய காலத்தில் இரண்டாண்டு கால வதிவிட அனுமதியையும் உடனடியாகத் தொழில்வாய்ப்பையும் பெற்றுக் கொண்டு டெனிஷ் சமூகத்துடன் இணைந்து கொள்ளப் புதிய சட்டம் வாய்ப்பளிக்கவுள்ளது.சமூக நல உதவிகளும் அவர்களுக்குக் கிடைக்கவுள்ளன.

விரைவாக வதிவிட அனுமதியைப் பெற்றுக்கொண்டு நாட்டின் தொழில் சந்தையில் இணைவதோடு அவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதை துரிதப்படுத்தவும் விரும்புகின்றோம் என்று டென்மார்க்கின் வெளிவிவகாரம் மற்றும் குடியேற்ற அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

உக்ரைனில் இருந்துவரும் வெளிநாட்டுப் பிரஜைகள் எவரும் இந்த விசேட சட்டத்தின் கீழ் கையாளப்படமாட்டார்கள் என்பதையும் டெனிஷ் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். உதாரணமாக உக்ரைனில் கல்வி கற்கும் அல்லது தொழில்புரியும் இந்தியர்கள், இலங்கையர்கள் அல்லது ஆபிரிக்கர்கள் இத்திட்டத்தில் உள்வாங்கப்படமாட்டார்கள்.

தற்சமயம் நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் உக்ரைனியர்கள் டென்மார்க்கில் 90 நாட்கள் நாட்டின் எந்தப் பகுதியிலும் சென்று வரவும் தங்கியிருக்கவும் முடியும்.

ஆனால் வதிவிட உரிமை கோரிவிட முடியாது. இதேவேளை, 2016 ஆம் ஆண்டில் அப்போதைய அரசு கொண்டுவந்த ஒரு சட்டம் நாட்டுக்குள் வருகின்ற அகதி ஒரு வர்தன்னோடு எடுத்துவருகின்ற தங்க ஆபரணங்கள் மற்றும் அவை போன்ற பெறுமதியான சொத்துக்கள், பணம் போன்றவற்றை அவர்களிடம் இருந்து பறிப்பதை அனுமதிக்கின்றது.இதற்கு முன்னர் சிரியா மற்றும் ஈரான் அகதிகள் படையெடுப்பின் போது இந்தச் சட்டம் பயன்பாட்டில் இருந்தது.பத்தாயிரம் குரோனர்களுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய பணம், உடைமைகளைப் பொலீஸார் பறிமுதல் செய்வதற்கு அச் சட்டம் இடமளித்தது. காலாவதியாகிவிட்ட அந்தச் சட்டம் உக்ரைன் அகதிகள் மீது பிரயோகிக்கப்படமாட்டாது என்று தெரியவருகிறது.

"உக்ரைன் நமக்கு அருகில் உள்ளது. ஐரோப்பாவின் ஒரு பகுதி. எங்கள் பின் கோடியில் உள்ளது. ரஷ்யாவின் ஏவுகணைகள், மற்றும் கொத்துக் குண்டுகளில் இருந்து தப்பியோடி வருகின்ற உக்ரைனியர்களைப் பாதுகாப்பதில் டென்மார்க்கிற்கு விசேட பொறுப்பு இருக்கிறது" என்று டென்மார்க் பிரதமர் செய்தி நிறுவனம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

டென்மார்க் சமீப காலங்களில் அகதிகள் மற்றும் குடியேற்றவாசிகளுக்கு எதிராக எடுத்துவருகின்ற கடும்போக்கு சர்வதேச மட்டத்தில் கண்டனத்துக்குள்ளாகியிருந்தது. அந்நிலையில் உக்ரைன் அகதிகள் விடயத்தில் காட்டப்படுகின்ற விசேட கரிசனை அகதிகள் தொடர்பான அதன் பொதுக் கொள்கையில் காணப்படுகின்ற இனம் மற்றும் பிரதேச பாரபட்சங்களைக் காட்டுவதாகக் கண்டனங்கள் எழுந்துள்ளன. (அ)



# அணு ஆயுதங்களை உருவாக்கும் உக்ரைன்!

## ரஷ்ய ஊடகங்கள் பரபரப்பு குற்றச்சாட்டு!

மொஸ்கோ, மார்ச் 07

புளுடாட்டோனியத்தை அடிப்படையாகக் கொண்ட அணு ஆயுதத்தை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை உக்ரைன் முன்னெடுத்து வருவதாக ரஷ்ய ஊடகங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை குற்றஞ்சாட்டியுள்ளன.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை உறுதி செய்வதற்கான ஆதாரங்கள் எதனையும் அந்த ஊடகங்கள் வெளிப்படுத்தவில்லை.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீதான படையெடுப்புக்கு உத்தரவிட்டார். இதன் நோக்கம் உக்ரைன் நேட்டோ அமைப்பில் இணைவதை தடுப்பதை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது.

இந்த படையெடுப்பை தொடர்ந்து மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது தீவிர பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. அத்துடன், உக்ரைனுக்கு ஆயுதங்கள், நிதி உள்ளிட்ட உதவிகளை வழங்கி வருகின்றன.

இவ்வாறான நிலையில் 2000 ஆம் ஆண்டு மூடப்பட்ட செர்னோபில் அணுமின் நிலையத்தில் உக்ரைன் அணு ஆயுதங்களை உருவாக்கி வருவதாக ஞாயிற்றுக்கிழமை ரஷ்ய ஊடகங்களான டாஸ், ரியா மற்றும் இன்டர்பாக்ஸ் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. எனினும் அதற்கான வெளிப்படையான ஆதரங்களை வெளியிடவில்லை. சோவியத் ஒன்றியம் உடைந்ததைத் தொடர்ந்து 1994 இல் அணு ஆயுதங்களை கைவிட்ட நிலையில் அணுசக்தி திட்டம் ஏதும் என்று உக்ரைன் அரசாங்கம் கூறியுள்ளது. (அ)



# சனத்தொகை மிக அடர்த்தியான இடங்களை குறிவைக்கும் ரஷ்யா!

லண்டன், மார்ச் 07

உக்ரைனில் சனத்தொகை அடர்த்தியான பகுதிகளை குறிவைத்து ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தி வருவதாக பிரிட்டிஷ் இராணுவ உளவுத்துறை நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

அத்துடன், உக்ரேனிய படைகளின் கடும் எதிர்ப்புக்களால் ரஷ்யாவின் முன்னேற்றம் மிக மெதுவாகவே உள்ளதாகவும் புலனாய்வுத்துறை குறிப்பிட்டுள்ளது.

உக்ரேனிய படைகளின் கடும் எதிர்ப்பும் வலிமையும் தொடர்ந்து ரஷ்யாவை ஆச்சரியத்தில் ஆழ்த்துவதாக பிரிட்டிஷ் இராணுவ உளவுத்துறை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கார்கிவ், செர்னிஹிவ் மற்றும் மேரியோபோல் உட்பட பல இடங்களில் மக்கள் வசிக்கும் பகுதிகளை குறிவைத்து ரஷ்யா தாக்குதல்களை முன்னெடுத்து வருகிறது.

இதற்கு முன்பு 1999 இல் செச்சினியாவிலும், 2016 இல் சிரியாவிலும் இதேபோன்ற தந்திரோபாயங்களை ரஷ்யா பயன்படுத்தியது. மக்களை இலக்கு வைத்து வான் மற்றும் தரைவழி தாக்குதல்களை நடத்தியது என பிரிட்டிஷ் இராணுவ உளவுத்துறை தெரிவித்துள்ளது. (அ)

## அணுக் கதிர் வீச்சு அச்சத்தால்

# அயடின் மாத்திரைகள் வாங்க அவசரப்படும் ஐரோப்பியர்கள்!

பரிஸ், மார்ச் 07

தொற்று நோய், தடுப்பூசி, மாஸ்க் என்பன மறைந்து போக புதிய அச்சங்கள் உலக மக்களைத் தொற்றுகின்றன.

கடந்த சில நாட்களாக மருந்தகங்களில் அயடின் மாத்திரைகளது விற்பனை அதிகரித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகின்றன. சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, பெல்ஜியம், மற்றும் போலந்து, பல்கேரியா போன்ற ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களே அயடின் வாங்க அவசரப்படுகின்றனர். ரஷ்ய அதிபர் நாட்டின் அணு ஆயுதப் படைப் பிரிவை முழு ஆயத்த நிலையில் இருக்குமாறு கட்டளையிட்டிருப்பதாலும் உக்ரைனில் ஐரோப்பாவின் மிகப் பெரிய அணு மின் ஆலை தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய ஆபத்து அதிகரித்திருப்பதும் அணுக்கதிர் வீச்சுப் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. கதிர்வீச்சில் இருந்து அயடின் உடலைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையில் பலர் அந்த மாத்திரைகளை வாங்கிச் சேகரித்து வருகின்றனர். பிரான்ஸைப் பொறுத்தவரை அதன் அணு மின் ஆலைகளைச் சூழ இருபது கிலோ மீற்றர்கள் சுற்றுவட்டத்தில் இயங்கும் மருந்தகங்களுக்கு அயோடின் மாத்திரைகளை விற்பனை செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.அப்பகுதிகளில் வசிப்போர் மருந்தகங்களில் தங்கள் வதிவிடத்தை உறுதிப்படுத்தி அயடின் மாத்திரைகளை வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இது ஒரு விபத்துச் சூழ்நிலையை எதிர்கொள்ளும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் ஆகும். அணு உலை விபத்துகள் நேர்ந்தால் சுற்றுவட்டார மக்கள் கதிர்வீச்சினால் தைரொய்ட் சுரப்பி பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த வசதி ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது. ஆனால் இப்போது உலகம் ஓர் அணு ஆயுதப் போருக்கான ஆபத்தை எதிர்கொள்வதால் அயடின் மாத்திரைகளுக்கான கிராக்கி திடீரென எல்லா இடங்களிலும் அதிகரித்துள்ளது. (அ)

# கபில்தேவ் சாதனையை முறியடித்தார் அஸ்வின்!



மொகாலி, மார்ச் 07

இலங்கை அணியின் அசலங்கவின் விக்கெட்டை வீழ்த்திய தன் மூலம் இந்தியாவின் ஜாம்பவான் வீரரான கபில்தேவின் சாதனையை நேற்று முறியடித்தார் இந்திய வீரரான ரவிச்சந்திரன் அஸ்வின்.

85 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அஸ்வின் இதுவரை 435 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார்.

இதன் மூலம், அதிக டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய இரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமையை அவர் படைத்துள்ளார். இதில் 619 விக்கெட்களுடன் கும்ப்ளே முதலிடத்தில் உள்ளார்.

மேலும், டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணிக்கு எதிராக அதிக விக்கெட் எடுத்த இந்தியர் என்ற சாதனையையும் அஸ்வின் படைத்துள்ளார். கபில் தேவை தவிர்த்து, நியூசிலாந்து அணியின் ஜாம்பவான் ரிச்சர்ட் ஹாட்லீ (431), ரங்கன ஹேரத் (433) ஆகியோரின் சாதனையையும் அஸ்வின் நேற்று முறியடித்தார்.



# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் இலங்கை அணி படுதோல்வி!

மொஹாலி, மார்ச் 07

இந்திய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இனிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது இலங்கை அணி.

இந்திய, இலங்கை அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் மொஹாலியில் வெள்ளிக்கிழமை தொடங்கியது.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி முதல் இனிங்ஸில் 357/6 ஓட்டங்களை எடுத்திருந்தது. இரண்டாம் நாளான சனிக் கிழமை இந்திய அணி 129.2 ஓவர்களில் 574/8 ஓட்டங்களை குவித் திருந்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தியது.

சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா 228 பந்துகளில் 3 சிக்ஸர், 17 பௌண்ட்ரிகளுடன் 175 ஓட்டங்களை விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இலங்கை தரப்பில் லக்மால், விஷ்வா பெர்னாண்டோ, எம்புல் தெனிய தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர், முதல் இனிங்ஸை ஆடத் தொடங்கிய இலங்கை அணி 174 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. சிறப்பாக விளையாடிய நிசங்க ஆட்டம் இழக்காமல் 61 ஓட்டங்களை எடுத்தார்.

துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட ஜடேஜா பந்துவீச்சிலும் அபாரம் காட்டினார். இந்தியா சார்பாக ஜடேஜா ஐந்து விக்கெட்களையும் பும்ரா, அஸ்வின் தலா இரண்டு விக்கெட்களையும் எடுத்தனர்.

400 ஓட்டங்கள் முன்னிலை பெற்று வலுவான நிலையிலிருந்த இந்திய அணி இரண்டாவது இனிங்ஸிலும் இலங்கையை துடுப் பெடுத்தாடும் வாய்ப்பை வழங்கியது.

தொடக்க வீரர் திரிமன்னே ஓட்டம் எதுவும் எடுக்காமலே ஆட்டமிழக்க அவரைத் தொடர்ந்து நிசங்கவும் 6 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார்.

தேநீர் இடைவேளையின் போது, இலங்கை அணி 4 விக்கெட் இழப்புக்கு 120 ஓட்டங்களை எடுத்திருந்தது.

பின்னர், அஸ்வின், ஜடேஜா சுழல்பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் இலங்கை அணி வீரர்கள் பெவிலியன் திரும்பிய வண்ண மிருந்தனர். இறுதியாக, 178 ஓட்டங்களுக்கு இலங்கை அணி சகல விக்கெட்களையும் இழந்தது.

நிரோசன் டிக்வெல்ல அதிக பட்சமாக 51 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்திய அணி சார்பாக அஸ்வினும் ஜடேஜாவும் தலா 4 விக்கெட்களை வீழ்த்தினர்.

இதன் மூலம் இனிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்று இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ளது.




# சுதந்திரக் கிண்ணம் வடக்கின் வசமானது

யாழ்ப்பாணம், மார்ச் 07

தென் மாகாணத்தை 3 -1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி சுதந்திரக் கிண்ணத்தைக் கைப்பற்றியது வடக்கு மாகாண அணி.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இந்தப் போட்டி ஆரம்பமானது.

மாலைதீவில் அண்மையில் உயிரிழந்த மன்னார் மாவட்டத்தின் உதைபந்தாட்ட வீரர் டக்சன் பியூஸ்லஸின் உருவப்படத்தை ஏந்தியவாறு வட மாகாண அணியினர் தமது கௌரவஞ்சலியை செலுத்தியமையை தொடர்ந்து போட்டி ஆரம்பமானது.

போட்டி ஆரம்பமாகி 10 நிமிடங்களின் பின்னரே சூடு பிடிக்கத் தொடங்கியது. இரண்டு அணிகளும் கோல் போடுவதற்கு கடுமையாக முயற்சித்தன. ஆனால், அந்த முயற்சிகளை ஓர் அணி மற்றையதை தடுத்து நிறுத்துவதில் முடிந்தது. எனினும், 23ஆவது நிமிடத்தில் வட மாகாண பின்கள வீரர் ஜூட் சுபன் பரிமாறிய பந்தை இடதுபுறமாக பெற்றுக் கொண்ட விஜயகுமார் விக்னேஸ், கோல் பெட்டியை நோக்கி உதைத்தார். அதனை தென் மாகாண பின்கள வீரர் என். ராஜபக்ஷ தடுக்க முயற்சித்த போதிலும் அது கோலானது. இதனால், வடக்கு மாகாண அணி முன்னிலை பெற்றது.

இடைவேளை நெருங்கும் போது மத்திய களத்திலிருந்து வீ. கீதன் மிக நேர்த்தியாக பரிமாறிய பந்தை முன்நோக்கி நகர்த்திச் சென்ற கண்ணன் தனுஷன், எதிரணி கோல் காப்பாளரை கடந்துசென்று மிகவும் அலாதியாக கோல் போட இடைவேளையின்போது வட மாகாணம் 2 - 0 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இடைவேளையின் பின்னர் சுமார் 10 நிமிடங்கள் வரை ஆட்டம் மந்தகதியில் நடந்தது. எனினும், 59ஆவது நிமிடத்தில் வட மாகாண அணித் தலைவர் மரியதாஸ் நிதர்சன் 2 தடவைகள் முயற்சித்து கோல் போட்டு, இந்த சுற்றுப் போட்டியில் தனது கோல் எண்ணிக்கையை 7ஆக உயர்த்தினார்.

அதன் பின்னர் போட்டியில் அவ்வப்போது முரட்டுத்தனமாக இரண்டு அணி வீரர்களும் விளையாடியதால் வீரர்களுக்கு மத்தியஸ்தர் நிவொன் ரொபேஷ் ஆலோசனைகள் வழங்கி அவர்களை அமைதிப்படுத்த முயற்சித்தார். எனினும், போட்டியில் சூடுபிடிக்க மஞ்சள் அட்டைகளை இரண்டு அணி வீரர்களுக்கும் காட்டப்பட்டன.

தொடர்ந்து அபார ஆற்றல்களை வெளிப்படுத்திய தென் மாகாணம் 85ஆவது நிமிடத்தில் கேஷான் துமிது மூலம் ஆறுதல் கோல் ஒன்றைப் போட்டது. அதன் பின்னர் மேலும் கோல் போடுவதற்கு தென் மாகாணம் எடுத்த முயற்சிகள் கைகூடாமல் போக வட மாகாணம் அங்குரார்ப்பண சுதந்திர கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் சம்பியனானது.

சம்பியன் வென்ற வடக்கு மாகாண அணிக்கு 19 இலட்சம் ரூபாய் பணப் பரிசும், வீரர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு தங்கப் பதக்கங்களும் வழங்கப்பட்டன.

இரண்டாம் இடத்தைப் பெற்ற தென் மாகாண அணிக்கு கிண்ணத்துடன் 9 இலட்சத்து 50,000 ரூபாய் பணப்பரிசும் வீரர்களுக்கு வெள்ளிப் பதக்கங்களும் வழங்கப்பட்டன.

சுற்றுப் போட்டியில் அதிக கோல்கள் (7) போட்டமைக்கான தங்கப் பாதணி விருதையும் அதி சிறந்த வீரருக்கான தங்கப் பந்து விருதையும் வட மாகாண அணித் தலைவர் மரியதாஸ் நிதர்ஷன் வென்றெடுத்தார்.

கிழக்கு மாகாண கோல்காப்பாளர் மொஹமத் முர்ஷித் சிறந்த கோல் காப்பாளருக்கான தங்கக் கையுறை விருதையும் அதே அணியைச் சேர்ந்த மொஹமத் முர்ஷித் வளர்ந்துவரும் வீரருக்கான விருதையும் வென்றெடுத்தனர். இந்த நால்வருக்கும் தலா 10,000 ரூபாய் பரிசும் வழங்கப்பட்டன.

இதேவேளை, நேர்த்தியான விளையாட்டுக்கான பெயார் ப்ளே விருது கிழக்கு மாகாண அணிக்கு வழங்கப்பட்டது.

இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்துகொண்டு பிரதான பரிசுகளை வழங்கியதுடன் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜஸ்வர் உமர், செயலாளர் நாயகம் ஓய்வுநிலை பிரதி பொலிஸ் மாஅதிபர் உப்பாலி ஹேவகே, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ். உதைபந்தாட்ட லீக் தலைவர் ஆர்னல்ட் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

(ஐ)

## மகளிர் உலகக் கிண்ணம்

# இந்திய அணியிடம் வீழ்ந்தது பாகிஸ்தான்!

பே ஓவல், மார்ச் 07

மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் லீக் போட்டியில் பாகிஸ்தானை 107 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வீழ்த்தியது.

நியூலாந்தின் பே ஓவல் மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தியா தனது முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானை எதிர்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. இதையடுத்து களமிறங்கிய இந்தியா 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 244 ஓட்டங்கள் எடுத்தது.

இந்திய அணியில் அதிகபட்சமாக பூஜா வஸ்த்ராகர் 67, ராணா 53, ஸ்மிருதி மந்தனா 52, தீப்தி சர்மா 40 ஓட்டங்கள் சேர்த்தனர். 245 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி களமிறங்கியது. ஆனால், இந்திய மகளிர் அணியின் அபார பந்துவீச்சு முன் பாகிஸ்தான் அணியால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

அந்த அணி 43 ஓவர்களில் 137 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது. பாகிஸ்தான் அணியில் அதிகபட்சமாக சிட்ரா அமீன் 30, டயானா 24, பாத்திமா சானா 17, மரூப் 15, சிட்ரா நாவஸ் 12 ஓட்டங்களை மட்டுமே எடுத்தனர்.

இந்திய தரப்பில் ராஜேஸ்வரி கெயக்வாட் 4, ஜுவான் கோஸ்வாமி, ஸ்னேக் ராணா ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

# கடும் எச்சரிக்கையுடன் 1,044 பேர் விடுவிப்பு

கொழும்பு, மார்ச் 04
மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 1,044 பேரை கைது செய்த பொலிஸார் கடும் எச்சரிக்கையின் பின்னர் அவர்களை விடுவித்தனர்.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறுவோரை கண்காணிக்கும் செயற்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், 612 பொலிஸார் இணைந்து நேற்று முன்தினம் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது 2,511 மோட்டார் சைக்கிள்களும் 1,895 முச்சக்கர வண்டிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அத்துடன், 4,182 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 1,044 பேர் எச்சரிக்கை விடுத்தனர். (கே)

# பாரவூர்தி - ஓட்டோ விபத்து! இரு இளைஞர்கள் மரணம்!!

இரத்தினபுரி, மார்ச் 07

**இரத்தினபுரியில் பாரவூர்தி மற்றும் முச்சகர வண்டியும் மோதி விபத்துக்கு உள்ளானதில் இளைஞர்கள் இருவர் பலியாகினர்.**

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த ஹோமாகமை, கடுவலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 28 மற்றும் 27 வயதான இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

கவனவீனமாக வாகனத்தை செலுத்தியமை விபத்துக்கான காரணம் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். விபத்துக்குள்ளான பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# தம்புள்ளையில் கடை தீயால் எரிந்து நாசம்!

கொழும்பு, மார்ச் 7
தம்புள்ளை பொருளாதார மத்திய சந்தைக்கு அருகிலுள்ள மொத்த விற்பனை நிலையமொன்றில் நேற்று முன்தினம் இரவு தீப்பற்றியதில் பகுதியளவில் சேதமடைந்தது.

தம்புளை பொலிஸார் மற்றும் தம்புளை மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர், இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பணியில் மாநகர சபையின் இரண்டு தீயணைப்பு வாகனங்கள் மற்றும் விமானப் படையின் சிகிரியா பிரிவின் தீயணைப்பு வாகனம் என்பன ஈடுபடுத்தப் பட்டன.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. தம்புள்ளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# சட்டவிரோதமாக பணம் சேர்ப்பு 1,100 பேர் தொடர்பில் விசாரணை

கொழும்பு, மார்ச் 7
பொலிஸ் திணைக்களத்தின் சட்ட விரோத சொத்துக்கள் மற்றும் சொத்து விசாரணைப் பிரிவானது, சட்டவிரோதமான முறையில் பணம் சம் பாதித்த சுமார் 1,100 பேர் தொடர்பில் கடந்த 7 மாதங்களாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது என்று பிரதி பொலிஸ்மா அதிபரும் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். தொடர்ந்துரைத்த அவர்,

போதைப் பொருள் தொடர்பில் 325 விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போதைய நிலையில் 780 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவி னரால் ஒருவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவரின் சட்டவிரோத சொத்துக்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் இந்தப் பிரிவு விசாரணை களை முன்னெடுத்து வருகின்றது.

போதைப்பொருள் வியாபாரம், மதுபான வியாபாரம், ஆயுதக் கடத்தல், ஆள் கடத்தல் உள்ளிட்ட 18 சட்ட விரோத செயல்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறு தடைசெய்யப் பட்டுள்ள சொத்துக்களில் வீடுகள், கார், நிலம், தங்க நகைகள், வங்கிக் கணக்குகள் என்பன உள்ளடங்குகின்றன. விசார ணைகளின் போது 21 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர் என்றும் கூறினார். (கே)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 09 - 08 - 1951

உதிர்வு 16 . 02 . 2021

## திரு. நாராயணசுவாமி மோகனதாஸ் (மோகன்)

**(திதி : 07.03.2022)**



குடும்பத்தின் குத்துவிளக்கே
ஆருயிர்த் துணைவனே
பாசமுள்ள உடன்பிறப்பே
அருமை மைத்துனனே
ஆசை மாமாவே
அன்பான சித்தப்பாவே
எங்களை மறந்து எங்கே போனீர்கள்
ஆண்டு ஒன்று என்ன
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் ஆறுமோ எம் துயர்
நாம் கூவி அழைக்கும் குரல் கேட்குதா?
எழுதப்பட்ட விதியை இறைவனாலோ
நாம் அழுத கண்ணீராலோ அழித்தெழுத முடியாதே
நீங்கள் இறைவன் திருவடியில் நிம்மதியா
தூங்க எங்கள் கண்ணீர் பூக்களால் அஞ்சலிக்கின்றோம்.

முகவரி :
இல.34, கள்ளி வீதி,
வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை

தகவல் :
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



மலர்வு 07 - 07 - 1980

உதிர்வு 18 . 02 . 2022

## சசிகரன் தவராஜா (கண்ணன்)

அல்வாய் கிழக்கு தச்சந்தறையைப் பிறப்பிடமாகவும், முல்லைத்தீவு உணாப் பிலவு, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சசிகரன் தவராஜா அவர்கள் 18.02.2022 வெள்ளிக்கிழமை அன்று லண்டனில் அகாலமரணமடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சதாசிவம் நாகம்மா தம்பதிகள், மயில்வாகனம் பொன்னம்மா தம்பதிகளின் அன்புப் பேரனும், அல்வாய் கிழக்கு பொதிரானையைச் சேர்ந்த சதாசிவம் தவராஜா (இ.போ.ச முல்லைத்தீவு சாலை முன்னாள் ஊழியர்) (முல்லைத்தீவு உணாப்பிலவு - கனடா) பூபாலதேவி (சாந்தா) தம்பதிகளின் செல்வப் புதல்வரும், அபிஷன் அவர்களின் பாசமிகு தந்தையும், சாந்தகுமரன் (குமரன் - லண்டன்), சுமதி (சுவிஸ்), கோமதி (கனடா), காலஞ்சென்ற ஐங்கரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சுரேஸ் (சுவிஸ்), ஜெயபாலன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுஸ்மிதன், சுருதி (சுவிஸ்), பரத், முகுந் (கனடா) ஆகியோரின் அன்பு மாமாவும், யதோசன், கரிக்ஷன் ஆகியோரின் சித்தப்பாவும், புஸ்பதேவன், ஈஸ்வரதேவன் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான செல்வராஜா, தருமராஜா மற்றும் சற்குணராஜா, சிவபாதராஜா, தியாகராஜா, ஆனந்தராஜா, துரைராஜா, தவமணிதேவி, சுலோ சனாதேவி, சுமங்கலாதேவி, நந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பெறாமகனும் ஆவார்.

*பார்வைக்கு :*
Thursday, 10 Mar 2022 10:30 AM - 1:00 PM
Cwmafan Community Engagement Centre Cwmafan Community Centre Depot Rd,Cwmafan SA12 9BA, United Kingdom

*தகனம் :*
Thursday, 10 Mar 2022 1:45 PM
Margam Crematorium Longlands Lane, Port Talbot SA13 2NR, United Kingdom

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**தவராஜா - பூபாலதேவி(சாந்தா) - பெற்றோர்) - 0016477178332**
**சுமதி(சகோதரி) - 0041789741117**
**கோமதி(சகோதரி) - 0014168804493**
**சுரேஸ் (மைத்துனர்) - 0041797799808**
**ஜெயபாலன் (மைத்துனர்) - 0016478927066**

தகவல் :
**குடும்பத்தினர்.**

## காணாமல்...

கிறது என்று ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிற்செல் பச்லெட் அம்மையார் தெரிவித்துள்ளார்.

அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை அரசாங்கம் விரைவாக அங்கீகரிக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கே என்பதை விரைவாக முடிவு செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவா ரணமும், குற்றம் இழைத்தவர்களுக்கு தண்டனையும் விரைவாக வழங்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடர் வெள்ளிக்கிழமை இரவு 10. 30 மணிக்கு (இலங்கை நேரம்) ஆரம்பமானது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சர்வதேச குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்பேற்பதற்கான நீதிமுறையை உருவாக்காத இலங்கை அரசு அதோடு, போர்க்குற்றங்கள் தொடர்புடைய இராணுவ அதிகாரிகளை அரசாங்க உயர் பொறுப்புகளிலும் அமர்த்தியுள்ளதால், சர்வதேச அளவில் பொறுப்பேற்பை மேம்படுத்த மாற்று உத்திகளை மனித உரிமைகள் பேரவை கையாள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பாக பெப்ரவரி 25ஆம் திகதி அனுப்பிய எழுத்துப்பூர்வமான அறிக்கையை பேரவை உறுப்பினர்கள் பெற்றிருப்பார்கள். 2021 பெப்ரவரியில் வெளியிடப்பட்ட முந்தைய அறிக்கைக்குப் பிறகான செயல்பாடுகளைப் பற்றியே இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. இந்த விஷயத்தை மனித உரிமை பேரவை தொடர்ந்து கண்காணிப்பதற்கான இன்றியமையாத தேவையை இந்த அறிக்கை காட்டுகிறது.

ஐ.நா. மனித உரிமை உயர் ஆணையர் அலுவலகத்துடன் இலங்கை அரசாங்கம் இணைந்து பணியாற்றுவது சமீப காலத்தில் அதிகரித்திருப்பதற்கும், சீர்திருத்தங்களை தொடங்குவதற்குமான அறிகுறிகள் தெரிகின்றன.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் சில பிரிவுகளை திருத்துவதற்கும், இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்குமான முன்மொழிவுகள் வரவேற்கத் தகுந்த ஆரம்ப கட்ட நடவடிக்கைகள்.

பயங்கரவாத தடுப்புச் சட்டம் தொடர்பான அடிப்படையான பிரச்னைகளை பரிசீலனை செய்ய மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசாங்கத்தை ஊக்குவிக்கிறேன்.

தவறிழைத்தவர்கள் தப்பித்துக்கொள்ளலாம் என்ற நிலையை முடிவுக்குக் கொண்டுவர, கடந்த கால அத்துமீறல்கள் மீண்டும் நிகழ்வதைத் தடுக்க ஆழமான சட்ட, நிறுவன, பாதுகாப்புத் துறை சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தின் குடிமை செயல்பாடுகள் இராணுவ மயமாவது தொடர்ந்து ஆழமடைந்துவருகிறது என்றும் தெரிவித்துள்ளார் பச்லெட் அம்மையார். (ஐ)

## அமெரிக்க...

வெளியுறவுத்துறை செயலர் விக்ரோறியா நுலாண்ட் எதிர்வரும் 22ஆம் திகதி இலங்கை வருகிறார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த இராஜதந்திரியான விக்ரோறியா தனது பயணத்தின்போது, ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரச தரப்பினரையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உட்பட எதிர்க்கட்சியினரையும் சந்தித்து கலந்துரையாடுவார் என்று கூறப்படுகின்றது.

நீண்ட நாட்களுக்கு பின்னர் அமெரிக்கா மூத்த இராஜதந்திர அதிகாரியை அமெரிக்கா இலங்கைக்கு அனுப்புகின்றது. ஜனாதிபதி ஜோ பைடனின் முக்கிய செய்தியுடனேயே விக்டோரியா நுலாண்ட் இலங்கை வருகிறார் என்று கொழும்பு இராஜதந்திர தரப்புகள் தெரிவித்தன.

இதே வேளை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பணியகத்தின் உதவிச்செயலாளர் டொனால்ட் லூவும் இலங்கைக்கு வரவுள்ளார். அவரும் அரச மற்றும் எதிர்க்கட்சி தரப்புகளுடன் பேச்சு நடத்துவார்.

இவர்களின் பேச்சின்போது, மனித உரிமைகள், வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகிய விடயங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படவுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பரில் அமெரிக்கா சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் டொனால்ட் லூவை சந்தித்துப் பேசியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டெங்கு காய்ச்சலால்...

தாகத் தெரிவிக்கப்பட்டது.

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு ஆயுள்வேத சிகிச்சை அளிக்கப்பட்டது. குழந்தையின் நிலை மோசமாகவே, நேற்று முன்தினம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் குழந்தையை பெற்றோர் சேர்ப்பித்தனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக குழந்தை யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. ஆனால், அன்றிரவே சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்ததாக விசாரணைகளில் தெரிய வந்தது.

டெங்கு காய்ச்சல் காரணமாகவே குழந்தையின் இறப்பு இடம்பெற்றதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மரண விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் நேற்று மேற்கொண்டார். (ஐ)

## இலங்கையர்களின்...

அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கூறியுள்ளார்.

உள்நாட்டில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் மக்கள் ஆணை பெற்ற அரசாங் கம் முன்னெடுத்து வரும் முன்னேற்றகரமான நட வடிக்கைகளுக்கு ஐ. நா. ஆணையாளர் உள்ளிட்ட சர்வதேச தரப்பினர் அங்கீ காரம் அளித்துள்ளதோடு தொடர்ந்தும் அந்தச் செயல்பாடுகள் இடம்பெற வேண்டும் என்றும் கோரியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்றுவருகிறது. இதில் பங்கேற்க வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் நீதிஅமைச்சர் ஜனாதிபதி அலி சப்ரி உள்ளிட்ட குழுவினர் ஜெனிவா சென்றுள்ளனர். குறித்த குழுவினர் அங்கு ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் மிற்செல் பச்லெட் உட்பட உறுப்பு நாடுகளின் முக்கிய பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு உப நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தனர்.

இதைத் தொடர்ந்தே அவர் மேல் வருமாறு கருத்துரைத்தார்.

மனித உரிமைகள் ஆணையாளரை உள்நாட்டில் காணப்படுகின்ற யதார்த்த நிலைமைகளை பார்வையிடுவதற்கு வருமாறு அழைப்பு விமுத்துள்ளோம். அவரின் விருப்பத்தின்போது அவர் விரும்பிய இடங்களுக்கு செல்வதற்கும், விரும்பும் தரப்பினரைப் பார்வையிடுவதற்கும் சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் செயல்படுவதற்கும் ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் குறிப்பிட்டிருந்தோம்.

இதேநேரம், அவர் உள்ளிட்ட ஏனைய தரப்பினரைச் சந்தித்தபோது 42ஆண்டுகளுக்குப் பின்னர் முதற்தடவையாக பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேநேரம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், மனித உரிமைகளை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களுக்காக பல்வேறு செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பதை எடுத்துக்கூறினோம்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் காணப்படுகின்ற சவால்களை வெளிப்படுத்தியதோடு, உள்நாட்டில் பொறிமுறையொன்றின் ஊடாக பிரச்னைகளை தீர்ப்பதற்கும் இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை முழுமையாக களைந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளோம் - என்றும் சொன்னார். (ஐ)

## இலங்கைக்கு...

அந்நியச் செலாவணி மற்றும் கடனை திருப்பிச் செலுத்தும் நெருக்கடியிலிருந்து நீண்டகால மீட்சியை இலக்காகக் கொண்ட பொருளாதார நடவடிக்கை திட்டத்தை சமர்ப்பிக்க இந்தியா கோரியுள்ளது.

அத்துடன், வடக்கு மற்றும் கிழக் கில் பொருளாதாரத் திட்டங்களைத் தொடங்குவதற்கான முன்னேற்பாட்டு பட்டியலையும் கேட்டுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பரில் 50 கோடி அமெரிக்க டொலர் கடனை பெற்றுக் கொண்ட நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இந்திய விஜ யம் இரண்டு முறை இரத்து செய் யப்பட்டது. இதன் காரணமாக உணவு, எரிபொருள், மருந்துப் பொருட்களை பெற்றுக்கொள்வதற் காக மேலும் 100 கோடி டொலர் கடனைப் பெறுவதற்கு இன்னமும் திட்டம் வகுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இலங்கை அரசு டிசெம்பரில் பெற்ற கடன் தவணை இந்த வாரத்துடன் நிறைவடைகிறது. ஆனால், அதை செலுத்த முடியா நிலையி லேயே பலாலி விமான நிலை யத்தை மீண்டும் திறப்பது, திருகோணமலை துறைமுக பாதுகாப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை இந் தியா முன்வைத்துள்ளது என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## 3 மாதங்களுக்குள்...

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை பெறு பேறுகளை வெளியிடுவதற்கான தயார்ப்படுத் தல்கள் மேற்கொள்ளப் படுகின்றன என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல். எம். டி தர்மசேன தெரிவித்துள்ளார்.நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பி லேயே இதனைத் தெரிவித்தார். (ஐ)

## வவுனியா...

இடம்பெற்றது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த பு. சிறிதரன் (வயது 46) அவரின் மகனானா சி. டினோ காந் (வயுது 14) ஆகியோரே மரணமாகி னர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மன்னாரிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து குருக்கள் புதுக்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது உள்வீதியில் இருந்து பிரதான வீதிக்கு ஏறிய மோட்டார் சைக்கிளை மோதியது.

இதில், மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற தந்தை சம்பவ இடத்திலேயே நசியுண்டு பலியானார். அவரின் மகன் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் சிறிது நேரத்திலேயே உயிரிழந்தார்.

விபத்தையடுத்து ஆத்திரமடைந்த கிராம மக்கள் பேருந்தைத் தாக்கினர். இதையடுத்து அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பூவரசங்குளம் பொலிஸார் நிலமையை கட்டுக்குள் கொண்டு வர முயற்சித்தனர். எனினும், அது பலனளிக்காத நிலையில் விசேட அதிரடிப் படையினர் களத்திற்கு அழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், மேலதிக விசாரணைகளையும் தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

## இலங்கைத்...

டுக் கொடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டதாக அந்தக் கட்சியின் வட்டாரங்கள் ஈழநாடுவுக்கு தெரிவித்தன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மாவட்ட கிளைக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி விடயங்கள் கூடிப் பேசப்பட்டன.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் - குறிப்பாக தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மீது கடும் அதிருப்தியை தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக் கிளையினர் வெளியிட்டனர். இது தொடர்பில் அந்தக் கட்சியின் உயர்மட்டங்கள் இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டதுடன், மத்திய குழு கூட்டத்திலும் இந்த விடயம் குறித்து ஆராயவும் வலியுறுத்தப்பட்டது.

தவிர, உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆட்சிக் காலம் முடிவுற்றுள்ள நிலையில், அவற்றின் ஆயுள்காலத்தை ஓர் ஆண்டு காலத்தால் அரசாங்கம் நீடித்துள்ளது. எனவே, போனஸ் ஆசனங்கள் மூலம் உறுப்பினர்கள் ஆனவர்கள் போனஸ் ஆசனப் பட்டியலில் பெயர் இடம்பெற்றவர்களுக்காக தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்ய வேண்டும் என்றும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

## டிப்பர் மோதித்...

தனர். இருவரும் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளின் பின்னர் சாரதியை கைது செய்தனர். எனினும், அந்த சாரதியைக் கொண்டே வாகனத்தை எடுக்க முற்பட்டபோது கூடியிருந்த மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸ் உயரதிகாரி, குற்ற செயல் தொடர்பில் நீதியான விசாரணைக்கு உட்படுத்தப்பம் என்று வாக்குறுதி அளித்தார். அத்துடன், வேறொரு சாரதி மூலம் டிப்பர் வாகனத்தை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்தார். (ஐ)

## கொழும்பு...

ணம் புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்டு அதிகாலை 5 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்தை சென்றடையும்.

இந்த ரயிலில் 530 பயணிகள் பயணிக்க முடியும். விரைவில் இந்த இரவு நேர ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ம. உ. பேரவையின்...

மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "கச்சதீவுக்கு நான் எடுத்த முயற்சியாலேயே இலங்கையர்கள் 100 பேரும் இந்தியர்கள் 100 பேரும் செல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளனர். நானும் அங்கு செல்வதாக உள்ளேன். ஏனெனில், இரு தரப்பு கடற்றொழிலாளர்களுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வையும் நட்புறவையும் ஏற்படுத்துவற்காக செல்லவுள்ளேன்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பேச்சுக்கள் தொடர்கின்றன. எதிர்வரும் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருகின்றார். அப்போது அமைச்சருடனான சந்திப்பு நடைபெறும். அதற்கு முன்னராக அதிகாரிகள் மட்டத்திலான பேச்சும் இடம்பெறவுள்ளது - என்றும் கூறினார்.

## பாடசாலைகள்...

கடந்த பெப்ரவரி 7 ஆம் திகதி 2021 ஆம் ஆண்டுக் கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் ஆரம்பமாகின. இதன் காரணமாக நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் பெப்ர வரி 3 ஆம் திகதி முதல் விடுமுறை வழங்கப்பட் டிருந்தது. சுமார் ஒரு மாத காலத்திற்கு பின்னர் மீண்டும் பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ளன. இதனைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியிலுள்ள தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளுக்கு மாத்திரம் ஏப்ரல் 8 ஆம் திகதி விடுமுறை வழங்கப்பட்டு 18 ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப் படும்.

அத்துடன், கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைகள் மே மாதம் 23ஆம் திகதி முதல் ஜூன் முதலாம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டுக்கான தவணை விடுமுறைகள் தொடர்பில் எதிர்வரும் வாரங்களில் அறிவிக்கப்படும். இந்த விடுமுறைகள் தொடர்பில் கல்வி அமைச்சரால் எடுக்கப்படும் தீர்மானங்களே இறுதியானவை என்று சுற்று நிருபத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# எரிபொருள்கள் தட்டுப்பாட்டால் சுற்றுலா துறை பெரும் பாதிப்பு!

கொழும்பு, மார்ச் 7

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, சுற்றுலாத்துறை பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாக, அகில இலங்கை சுற்றுலா சங்கத்தின் தலைவர் கயந்த இத்தவெல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாட்டில் தற்போதைய நிலையில் அனைத்து வியாபாரங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. விசேடமாக கூறினால் 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் நாட்டின் சகல வியாபாரங்களும் பாதிப்பை எதிர்கொண்டன. கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல், வியாபார துறைகளை மேலும் பாதிப்படைய செய்தது.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளால், சுற்றுலா துறை சார்ந்த அனை வரும் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

சுற்றுலா சாரதிகள், சுற்றுலா விடுதிகளின் உரிமையாளர்கள், சுற்றுலா வழிகாட்டிகள் என சகல தரப்பினரும் பாரிய்பை எதிர்கொண்டுள்ளனர்.

நாட்டில் தற்போதைய நிலையில் சுற்றுலா துறை எதிர் கொண்டு இருக்கும் தீவிர பிரச்னையாக எரிபொருள் பிரச்னையே காணப்படுகின்றது. அதிகளவான சுற்றுலா பயணி கள் நாட்டுக்கு வருகை தந்துள் ளனர். இவ்வாறு வருகை தந்துள்ள சுற்றுலா பயணிகளுக்கு, போக்குவரத்து வசதிகளை செய்துகொடுப்பதற்கு போதிய எரிபொருள் இல்லை.

அரசாங்கம் எரிபொருள் பிரச்னையை தீவிர நிலைமைக்கு கொண்டுவந்து விட்டுள்ளது. நாட்டுக்கு வருகை தந்துள்ள சுற்றுலா பயணிகள் தங்களது சுற்றுலா காலத்தை குறைத்துக் கொண்டு மீண்டும் தங்கள் நாடுகளுக்கே திரும்பி செல்கின்றனர்.

அதுமட்டுமன்றி எதிர்வரும் நாட்களில் நாட்டுக்கு வருகை தரவுள்ள சுற்றுலூ பயணிகளும் தங்களது சுற்றுலா பயணங்களை இரத்துசெய்து வருகின்றனர்.

நாடு எங்கே பயணிக்கின்றது என்று எமக்கு தெரியவில்லை. சுற்றுலா துறையினரின் பிரச்னையை யார் பார்க்கின்றார் கள்? சுற்றுலா துறை அமைச்சர் என்ன செய்கின்றார்? நாம் பாதிப்பை எதிர்கொள்ளும் போது சுற்றலா அபிவிருத்தி சபை என்ன செய்கின்றது என கேள்வி எழுப்பினார். (ஐ)

## வனவாசி சிறுவர்களுக்காக இலவச கல்வி நிலையம்!

திருக்கோவில், மார்ச் 07

திருக்கோவில் பிரதேசத்தில் ஸ்ரீவள்ளிபுரம் வனவாசிகளின் சிறுவர்களுக்கான மேலதிக மாலைநேர இலவச கல்வி நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த உதவும் இதயங்கள் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்திருந்தார்.

இந்த இலவசக் கல்வி நிலையமானது ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த உதவும் இதயங்கள் அமைப்பின் ஸ்தாபகரின் நிதி பங்களிப்புடன் அம்பாரை மாவட்டத்திற்கான கிளையின் உறுப்பினர்களினால் மூன்றாவது கல்வி நிலையமாக திருக்கோவில் ஸ்ரீவள்ளிபுரத்தில் திறந்து வைக்கப்பட்டதுடன் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்று இருந்தன.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் திருக்கோவில் பிரதேச கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். இரவீந்திரன் நிருவாக உத்தியோகத்தர் ரீ.மோகனராஜா மற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர்களான சீலன் சாந்தி கிறிஸ்தவ மதகுரு ஆகியோரும் கலந்து கொண்டனர்.




## மரண அறிவித்தல்



பிறப்பு 15 - 10 - 1974

இறப்பு 03 - 03 - 2022

### திருமதி சிவாகரன் ரஜினி (சுசி)

யாழ். உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும், இத்தாலி Varese யை வதிவிடமாகவும் கொண்ட சிவாகரன் ரஜினி அவர்கள் 03.03.2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டிதம்பி சின்னத்துரை – பிள்ளைஅம்மா தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா சின்னத்துரை, காலஞ்சென்ற நேச மலர் தம்பதிகளின் அன்பு மருமகளும்,சிவாகரன் அவர்களின் பாசமிகு மனைவியும், மியுசியா, இலக்கியா ஆகியோரின் பாசமிகு தாயாரும்,ரஜீவி, றஜீவ், றமா ஆகியோரின் அன்புச் சகோதரியும்,பிரியா, சுதன், கோபி, சங்கர் ஆகியோரின் அன்பு அண்ணியும் ஆவார்.

கிரியை :
Tuesday, 08 Mar 2022 8:00 AM - 11:00 AM
Onoranze Funebri Sant'Ambrogio - C.S.F. Campo Dei Fiori
Via Mulini Grassi, 10, 21100 Varese VA, Italy

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
றஜீவ் - சகோதரன்
Mobile : +447447475692

தகவல்:
குடும்பத்தினர்

## அமைச்சரவையை மாற்றுவதால் பிரச்னைகள் தீரப்போவதில்லை!

### திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.

கொழும்பு, மார்ச் 07

அமைச்சரவையை மாற்று வதால் பிரச்னைகள் தீரப் போவதில்லை. இந்த அரசில் உள்ளவர்கள் பலவீனமானவர்கள் என்பதாலேயே அடிக்கடி மாற்றங்கள் இடம்பெறுகின்றன என்று கூறியுள்ளார் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க.

அத்துடன், "விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்களின் செயல்பாடு எமக்குத் தெரியும். அவர்கள் மக்களைத் தவறாக வழிநடத்தினர். அப்படியானவர்களை எமது கட்சியில் இணைத்துக் கொள்ளத் தயாரில்லை."என்றும் அவர் கூறினார்.

"நாட்டை மீட்டெடுத்து, மக்களைப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டம் எம்மிடம் உள்ளது. எனவே, மக்கள் ஆணை வழங்கினால் ஆட்சியைப் பொறுப்பேற்று, சிறந்த நிர்வாகத்தை வழங்குவோம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்திக்கு தேசிய வேலைத்திட்டமொன்று உள்ளது. அரசியல், பொருளாதாரம் மற்றும் மக்களை பாதுகாக்கும் திட்டங்கள் எம்மிடம் உள்ளன. தற்போது பலத்த சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அதற்கான திட்டங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. பல தரப்புகளிடம் இருந்து ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்களை நீக்கியமை அரசின் முடிவாகும். மஹிந்த சிந்தனை உட்பட அரசின் திட்டங்களின் பின்னணியில் இவர்களே இருந்தனர். எனவே, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அவர்களும் பொறுப்புக்கூற வேண்டும். அவர்கள் அரசுக்குள் தொடர்ந்தும் இருந்து முரண்பாடுகளை தீர்த்துக்கொள்ளவே முற்படுகின்றனர்.

அமைச்சரவையை மாற்றுவதால் பிரச்னைகள் தீரப்போவதில்லை. இந்த அரசில் உள்ளவர்கள் பலவீனமானவர்கள் என்பதாலேயே அடிக்கடி மாற்றங்கள் இடம்பெறுகின்றன. விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்களின் செயல்பாடு எமக்குத் தெரியும். அவர்கள் மக்களைத் தவறாக வழிநடத்தினர். அப்படியானவர்களை இணைத்துக்கொள்வது பற்றி சிந்திக்க வேண்டிவரும். அரசில் இருந்து வெளியேறுபவர்களை எல்லாம் இணைத்துக்கொள்ளும் அளவுக்கு எமது கட்சி பலவீனம் அடையவில்லை - என்றார். (ஐ)

## 50 போத்தல் சாராயத்துடன் நெல்லியடியில் ஒருவர் கைது

வடமராட்சி, மார்ச் 07



50 கால் போத்தல் கள் சாராயத்துடன் வடமராட்சி - நெல்லியடி - முள்ளி சந்தியில் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

நெல்லியடி உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி உதயானந்தன் தலைமையில் கீழ் செயல்பட்ட பொலிஸ் குழு இவரை கைது செய்தது.

இந்தச் சம்பவத்தில், வரணியைச் சேர்ந்த 42 வயதுடைய நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர், நீண்ட காலமாக தான் இவ்வாறு சாராயம் விற்பனை செய்வதாக வாக்குமூலம் வழங்கினார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைதானவரை பொலிஸ் பிணையில் விடுவித்த நெல் லியடி பொலிஸார் அவருக்கு எதிராக பருத்தித்துறை நீதி மன்றில் வழக்கு தொடர நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-2)

## துப்பாக்கிகளுடன் இருவர் கைதாகினர்!

கொழும்பு, மார்ச் 7

இரத்தினபுரி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் உள்நாட்டு துப்பாக்கிகள் இரண்டுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி வெலிகே பொலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்போத்தாவை பிரதேசத்தில், பொலிஸார் மேற் கொண்ட சோதனை நடவடிக்கையில் உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைதானார்.

பலாங்கொடை பிரதேசத்தை சேர்ந்த 44 வயது நபரே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை மாத்தளை லக்கலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தன்கலதெனிய பிரதேசத்தில், பொலிஸார் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சோதனை நடவடிக் கையிலும் ஒருவர் கைதானார்.

துன்கொல பிரதேசத்தை சேர்ந்த 22 வயது நபரே கைதா னார். இந்த இரு சம்பவங்கள் தொடர்பிலும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (சே)

## உள்ளூராட்சி உறுப்பினர்களுடன் அமைச்சர் டக்ளஸ் கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், மார்ச் 07

வடமாராட்சி, தென்மாராட்சி உள்ளூராட்சி மன்றங்களின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களை அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சந்தித்துக் கலந்துரையாடினார்.

அந்தக் கட்சியின் யாழ்ப்பாணத் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் பற்றி உரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.